# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 04 ஞாயிற்றுக்கிழமை (18-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:53


அமெரிக்காவின் ஏற்பாட்டில்

# இலங்கைக்கு உதவும் நாடுகள் மாநாடு

# பெப்ரவரி நடுப்பகுதியில் வாஷிங்ரனில்

## தற்போதைய அரசியல் நிலை குறித்தே முக்கியமாக ஆராய்வு

வாஷிங்ரன்,ஜனவரி18

**இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு ஒன்று அடுத்த மாதம் 17ஆம் திகதி அமெரிக்கத் தலைநகர் வாஷிங்ரனில் நடக்க உள்ளது. சமாதான முயற்சிகள் முடங்கிப்போயுள்ள இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைமை பற்றி இந்த மாநாட்டில் ஆராயப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அமெரிக்க இராஜாங்க பிரதி அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிடேஜ் இந்தக் கூட்டத்தைக் கூட்டவுள்ளார்.**

வாஷிங்ரன் மாநாட்டில் நோர்வே, ஜப்பான் உட்படப் பல நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியமும் கலந்துகொள்ளும். ஜப்பானின் சார்பில் அதன் இலங்கைக்கான விசேட தூதுவர் யசூஷி அகாஷியும் நோர்வேயின் சார்பில் வெளிவிவகாரத் துணை அமைச்சர் விடர் ஹெல்கிஸனும் பங்கேற்பர். ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார ஆணையாளர் கிறிஸ் பெற்றன் தனது பிரதிநிதி ஒருவரை அனுப்பிவைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

டோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டிற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றிய விடயங்கள் குறித்தே மாநாட்டில் முன்னுரிமை கொடுத்து ஆராயப்படும் என்று தெரிகின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மட்டும் கலந்துகொள்ளும் இந்த மாநாட்டிற்கு அரசின் பிரதிநிதி

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் வடக்கு-கிழக்குக்கு அபிவிருத்தித் திட்டம்

### நோர்வே அரசு உதவி வழங்கும்

கிளிநொச்சி,ஜன.18

வடக்கு - கிழக்குக்கான அபிவிருத்தித் திட்டம் ஒன்று சர்வதேச பொருளாதார நிபுணர்களின் ஆலோசனைகளுடன் தயாரிக்கப்படவுள்ளது. இந்தப் பணிக்கு நோர்வே அரசு உதவி வழங்கவிருக்கின்றது.

விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய் மகேஸ்வரன் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குக்கான பொதுவான அபிவிருத்தித் திட்டம் ஒன்றை விடுதலைப் புலிகளின் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகம் தயாரிக்கவிருக்கிறது. இத்திட்டம் சகல துறைகளையும் உள்ளடக்கியதாக அமையும்.

வெளிநாட்டில் இருந்து துறை சார்ந்த பொருளாதார நிபுணர்களைப் பணிக்கு அமர்த்தி அவர்கள் மூலம் திட்டம் தயாரிக்கப்படும். இந்த நிபுணர்களை நியமிப்பதற்கும் அவர்களின் பணிகளுக்குத் தேவையான நிதியை வழங்குவதற்கும் நோர்வே அரசு உதவி வழங்கும்.

தயாரிக்கப்படும் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணி தற்போதைய நிர்வாகங்களிடம் ஒப்படைக்கப்படும் - என்று ஜோய் மகேஸ்வரன் மேலும் கூறினார். (ம-3)

## அடுத்த மாத நடுப்பகுதியில் நாடாளுமன்றம் கலைப்பு?

கொழும்பு,ஜன.18

அடுத்தமாத நடுப்பகுதியில் அல்லது இறுதிப் பகுதியில் ஜனாதிபதியால் நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் என்று கொழும்பு செய்தி வட்டாரங்கள் உறுதியாகத் தெரிவிக்கின்றன.

சமாதான முயற்சிகள் தடைப்பட்டு அரசியல் இழுபறி நிலை தோன்றியுள்ளதை அடுத்து நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு தேர்தல்களை நடத்துவதற்கு ஜனாதிபதி தயாராகி விட்டார் என்று அந்தச் செய்திகள் கூறுகின்றன.

எதிர்வரும் 20ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் மக்கள் விடு

(12ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இளைஞனின் சடலம் மீட்பு!

வவுனியா,ஜன.18

வவுனியா பாவற்குளம் பகுதியில் உள்ள காட்டுக்குள் மரத்தில் தொங்கிய நிலையில் இளைஞரின் சடலம் பொலீஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த செல்வராசா திலீப் (வயது 19) என்ற இளைஞனின் சடலமே அது என்று பின்னர் அடையாளம் காணப்பட்டது. அவர் தற்கொலை செய்து கொண்டாரா அல்லது கொலை செய்யப்பட்ட பின்னர் மரத்தில் தொங்கவிடப்பட்டாரா என்பது குறித்து பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-6)

## பத்து வேங்கைகளுக்கும் தலைவர் பிரபா அஞ்சலி!

கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் 11ஆவது நினைவு தின நிகழ்வில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினார். கிட்டு பீரங்கிப் படையணி, லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி மோட்டார் படையணி ஆகியவற்றின் ஒழுங்கமைப்பில் பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வின் ஆரம்பத்தில் தமிழீழத் தேசியக் கொடியை தளபதி கேணல் பால்ராஜ் ஏற்றி வைத்தார். கேணல் கிட்டு பீரங்கிப் படையணிக் கொடியை அதன் சிறப்புத் தளபதி மணிவண்ணனும் லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி மோட்டார் படையணியின் கொடியை அதன் சிறப்புத் தளபதி கேணல் பானுவும் ஏற்றி வைத்தனர்.

மாவீரர்களுக்கான பொதுச் சுடரினை தலைவர் பிரபாகரன் ஏற்றிவைத்தார். கேணல் கிட்டு, லெப்டினன்ட் கேணல் குட்டிசிறி ஆகியோரின் உருவப் படங்களுக்கும் அவர் மலர்மாலை அணிவித்தார். ஏனைய மாவீரர்களுக்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

தொடர்ந்து நிகழ்வுகள் (12ஆம் பக்கம் பார்க்க)



விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் இடம்பெற்ற கேணல் கிட்டு உட்பட்ட பத்து வேங்கைகளின் 11ஆவது நினைவு தினத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பொதுச்சுடரை ஏற்றி மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறார். (இடது), தீருவிலில் உள்ள கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவிடத்தில் இடம்பெற்ற நிகழ்வின்போது மாணவிகள் மாவீரர்களின் படங்களைத் தாங்கி வந்த காட்சி.

# தமிழரை பகடைக்காய்களாக வைத்துத்தான் தென்னிலங்கையில் அரசியல் நடக்கிறது

### மகளிர் அரசியல் பொறுப்பாளர் தமிழினி தெரிவிப்பு

தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக வைத்துத்தான் தென்னிலங்கையிலே சிங்களவர்களால் அரசியல் நடத்தப்படுகின்றது. தமிழ்மக்கள் எந்தக் கட்டத்திலுமே மிக விழிப்புடன் செயற்படவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் தமிழீழ அரசியல்துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று நடைபெற்ற 'பொங்கு தமிழ்' எழுச்சி நிகழ்வின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த்தேசிய இனம் தனது அபிலாஷைகளை உலகின் காதுகளில் ஒரே குரலில ஒலித்த நிகழ்வுதான் 'பொங்கு தமிழ்'

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இது ஒரு சாதாரண நிகழ்வு அல்ல. மாபெரும் தேசியத் திருவிழா. எமது மக்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் எமது விடுதலைப் போராட்டத்துக்கு தம்மாலான சகல பங்களிப்புக்களையும் வழங்கி எமக்குத் தோள் கொடுத்திருக்கின்றார்கள். அதற்காக அவர்கள் எவ்வளவோ அர்ப்பணிப்புக்களையும் செய்து வந்திருக்கிறார்கள்.

எமது இனத்தின் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டம் எனச் சித்திரித்து அதனை நசுக்கி விடுவதற்காகக் காலத்துக்குக் காலம் சிங்கள அரசுகள் சர்வதேச உலகில் பொய்ப்பிரசாரங்களைக் கட்டவிழ்தது விட்டன.

அவற்றை முறியடித்து போராட்டத்தின் உன்னதங்களையும் உண்மைகளையும் 'பொங்கு தமிழ்' நிகழ்வுகள் வெளியுலகுக்கு எடுத்துக்கூறின. விடுதலைப் போரின் பலத்துக்கு இது

(12ஆம் பக்கம் பார்க்க)

## 'பொங்கு தமிழ்' நிகழ்வின் 3 ஆம் ஆண்டு நிறைவு தினம்

'பொங்குதமிழ்' எழுச்சி நிகழ்வின் மூன்றாம் ஆண்டு நிறைவு நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் க.பகீரதன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றிவைத்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் பதவிக் காலம்: அரசு விரைவில் அறிக்கை

கொழும்பு,ஜன.18

ஜனாதிபதி தனது பதவிக் காலத்தை 2006 ஆண்டு வரை நீடிக்கலாமா என்பது குறித்த தனது நிலைப்பாட்டை விளக்கி அறிக்கை ஒன்றை அரசு ஓரிரு தினங்களில் வெளியிடவிருக்கின்றது.

கொழும்புக்கு வெளியே தங்கியிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் கொழும்பு திரும்பியுள்ளார்.

அமைச்சரவைச் சகாக்களுடன் தற்போதைய நிலை தொடர்பாக இன்று கலந்துரையாடிய பின்னர் ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பான சர்ச்சைக்குப் பதில் அளிக்கும் வகையில் பிரதமர் அறிக்கை ஒன்றை வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

12 ஆண்டுகள் பதவி வகிப்பதற்காகவே ஜனாதிபதி இரு தடவைகள் பதவியேற்றார் என்று ஜனாதிபதி செயலகம் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தது. (ம-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்



கேணல் கிட்டு உட்பட வங்கக் கடலில் காவியமான 10 வேங்கைகளின் 11ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை தீருவிலில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. கடற்புலிகளின் தீவகப் பொறுப்பாளர் அருணர், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் தயா, தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சூ.சிறில் ஆகியோர் பொதுச்சுடர் ஏற்றுவதையும். மேற்படி வீரவேங்கைகளின் நினைவாக நிறுவப்பட்ட நினைவுக்கல்லை கடற்புலிகளின் மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பகலவன் திரைநீக்கம் செய்து வைப்பதையும் கேணல் கிட்டுவின் உருவப்படத்துக்கு அவரின் உறவினர் ஒருவர் ஈகச்சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:கரவெட்டிச் செய்தியாளர்)

# மாவீரர்களின் அர்ப்பணிப்பினால் உருவானதே இன்றைய சமாதானம்

## கேணல் கிட்டு நினைவஞ்சலி நிகழ்வில் உரை

வடமராட்சி,ஜன.18

கேணல் கிட்டு உட்பட பத்து வீர வேங்கைகளின் உயிர்த் தியாகமே இன்றைய சமாதான சூழலைப் பெற்றுத் தந்தது. இத்தகைய மாவீரர்களின் பலத்தினால்தான் - அர்ப்பணிப்பில்தான் இன்று சமாதானம் பேசப்படுகின்றது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறைத் தலைவர் வி.பி.சிவநாதன்.

வங்கக் கடலில் வீரகாவியமான கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் பதினொராவது நினைவு தின நிகழ்வு நேற்றுமுன்தினம் வல்வெட்டித்துறை தீருவில் சதுக்கத்தில் வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

கேணல் கிட்டுவை நாம் இன்று நினைவுகூர்வதுடன் மட்டும் நின்று விடக்கூடாது. விடுதலைப் புலிகளின் போராளிகளில் முக்கியமானவரான இவர், போராளிகள், பொதுமக்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் நண்பராகத் திகழ்ந்தார்.

குறிப்பாக யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் தோழனாக இவர் இருந்தார். எமது சமூகத்திற்கும் விடுதலை வேண்டும். சமூகத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள் அகற்றப்பட வேண்[illegible] போராட்டத்தின் தன்மை [illegible] எடுத்துக் கூறினார்.

1984ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இவர் தளபதியாக கடமையாற்றிய காலத்தில் அவரது செயற்பாடுகளும், கருத்துக்களும் தொலைநோக்குடையதாகவிருந்தன.

இன்று நடைபெறுவதைப் பார்க்கும்போது அவரது தொலைநோக்குச் சிந்தனை புலனாகின்றது.

அன்று அரசியல் போராட்டத்தினைப் பார்த்தோம். இத்தகைய போராட்டத்தின் முக்கியத்துவத்தை மக்களுக்கு வெளிப்படுத்த அவர் காட்டிய முறையைப் பார்த்தோம். அவரது காலத்தில் ஆயுதப் போராட்டத்தை மக்கள் மத்தியில் உணரவைத்தவர் கேணல் கிட்டு. ஆயுதங்களை மக்களுக்குக் காட்டி அந்த ஆயுதங்கள மூலம்தான் விடுதலை வரும் என்பதை உணர்த்தியதுடன், அவ்வேளையில் என்னென்ன புதிய புதிய ஆயுதங்கள் வந்தனவோ அவற்றையெல்லாம் மக்களுக்குக் காட்டி அவற்றைப் பரீட்சித்துப் பார்த்தவரும் இவரே.

ஆயுதத்தின் மூலம்தான் விடுதலை கிடைக்கும்; சிங்கள அரசிடமிருந்து விடுபட ஆயுதம்தான் முற்றான வழி என்பதை மக்களுக்கு விளக்கியவரும் கேணல் கிட்டு என்றால்மிகையில்லை. அவர் போராளி மட்டுமல்ல அனைவரதும் நல்ல நண்பர். மக்கள் துன்பப்படும்போது அதில் தானும் பங்கெடுத்துக்கொள்வார். ஆயுதத்தினூடாக மக்களை மதிக்கும் பண்பு அவரிடம் இருந்தது.

போராட்ட நடவடிக்கை சர்வதேசத்திற்கு மாற்றப்பட்டபோது இவர் ஐரோப்பிய நாடுகளில் சிறந்த அரசியல் பணிகளை மேற்கொண்டார். இதனால், சர்வதேச அரசியல் ரீதியில் இவர் நன்கு மதிக்கப்பட்டார். உரிமைப் போராட்டத்திற்காக சர்வதேச உறவுகளைப் பலப்படுத்த கேணல் கிட்டு பெரிதும் முயற்சித்தார்.

இதைக்கண்டுகொண்ட வல்லாதிக்கம் உடைய இந்தியா இவரை ஒரு போராளியாக கருதாமல், இவரை பழிவாங்குகின்ற போராளியாகவே கருதியது. அவரைக் கைது செய்து பழி வாங்கலாம், பேரம்பேசலாம் என இந்திய அரசு நம்பியது.

ஆனால், புலிகள் தமது உயிரைத் துச்சமென மதித்து தங்கள் இனத்தின் ஒட்டுமொத்தமான விடுதலைக்காக எதிரியிடம் சரணடையாமல் தம்மைத் தாமே அர்ப்பணிப்பவர்கள் என்பதை நினைவில் கொள்ளாது இந்திய அரசு தமது படைவீரர்களைப் போல இவர்களை கைதுசெய்யலாம், என எதிர்பார்த்திருந்தது. ஆனால், கிட்டு உட்பட ஏனைய 10 வீரவேங்கைகளும் தமது உயிரை வங்க கடலுக்கு அர்ப்பணித்துக்கொண்டனர்.

கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்களால் சமாதானத்திற்கான தளம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. இன்றைய சர்வதேச தொடர்புகளின் ஆரம்பகர்த்தா கேணல் கிட்டு என்பதை தமிழ் மக்கள் எக்காலத்திலும் மறந்துவிடக்கூடாது. சர்வதேச சமூகத்தை தமிழ்மக்கள் பக்கம் திருப்பி அவர்கள் இனப்பிரச்சினை விவகாரத்தில் நடுவர்களாகப் பணியாற்றுவதற்கு ஆரம்ப கர்த்தாவாக இருந்த கிட்டுவையும் ஏனைய போராளிகளையும் தமிழ் மக்கள் தலை சாய்த்து வணங்கவேண்டும். - என்றார்.

**மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர்**

கடற்புலிகளின் மகளிர் அமைப்பின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி தமது உரையில் கூறியதாவது:-

தமிழர்களுக்கு ஒரு நாடு வேண்டும். அவர்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகத் தொடர்ந்து வந்த இனப்படுகொலைகள், தரப்படுத்தல் போன்றவற்றின் தாக்கங்களினாலேயே விடுதலைப் போராட்டம் ஆரம்பமானது. தமிழர்கள் குட்டக் குட்ட கடந்த காலங்களில் குனிந்து வந்தனர். தொடர்ந்தும் குனிய முடியாத நிலையில் ஸ்ரீலங்கா அரசே எம்மை ஆயுதமேந்திப் போராட வைத்தது.

கேணல் கிட்டு எந்தப் போராட்டத்திலும் முன்னின்று செயற்பட்டவர். 1985இல் பருத்தித்துறை, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து படையினர் வெளியேற முயற்சித்த போது சொற்பஅளவுப் போராளிகளின் உதவியுடன் அவர்களின் வெளியேறும் முயற்சிகளை முறியடித்தார்.

**வடமராட்சி கல்விக் கழகப் பொறுப்பாளர்**

வடமராட்சிக் கல்விக்கழப் பொறுப்பாளர் கி.தாயகன் தமது தலைமையுரையில் கூறியதாவது,

யாழ். குடாநாட்டில் இராணுவ முகாம்களில் இருந்து மனித வேட்டை நடைபெற்றபோது, சொற்ப அளவுப் போராளிகளுடன் இராணுவத்தை முகாம்களுக்குள் முடக்கி குடாநாட்டை புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்த பெருமை கிட்டுவையே சாரும். கேணல் கிட்டு போராளிமட்டுமல்ல. எழுத்தாளராக, புகைப்படக் கலைஞராக, அரசியல் ராஜதந்திரியாக, தளபதியாக பல்வேறு மட்டங்களில் செயற்பட்டவர்.

ஐரோப்பிய நாடுகளுடன் கலந்துரையாடி சமாதான முயற்சிகளை தலைவருக்கு எடுத்துக்கூறுவதற்காக தாயகம் நோக்கி வரும் வேளை இந்தியக் கடற்படையினால் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து இவர் சுற்றிவளைக்கப்பட்டார். மக்கள் அவரது வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில் வல்லாதிக்க இந்திய அரசால் அவர் சாகடிக்கப்பட்டார்.

கிட்டுவை சாகடித்ததன் மூலம் விடுதலைப் புலிகளின் போராட்டம் தளரும் என இந்தியா நினைத்திருந்தது. ஆனால், அதற்கு மாறாக உலகமே அதிர்ச்சிக்குள்ளாக்கும் படி கேணல் கிட்டுவின் பேரில் உருவாக்கப்பட்ட 'கேணல் கிட்டு பீரங்கிப படையணி', 'குட்டிசிறி பீரங்கிப் படையணி' என்பன போராட்டத்தில் பெரும் சாதனைகளைப் படைத்து நிற்கின்றன. ஸ்ரீலங்கா இராணுவ மட்டத்திலும் கிட்டுவின் பீரங்கிப்படையணி மறக்க முடியாத நிலையில் இருந்து வருகின்றது. - என்றார்.

**துணை அரசியல்துறைப் பொறுப்பாளர்**

யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் பேசுகையில் -

யாழ். குடாநாட்டை 1984ஆம் ஆண்டு புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பெருமை கேணல் கிட்டுவையே சாரும். கிட்டுவை இழந்தது பேரிழப்புத்தான். ஆனால், அவரது இழப்பு விடுதலைப் பேராட்டத்துக்கு மிகுந்த பலத்தை ஏற்படுத்தித்தந்தது. படைபலம் உயர்ந்து கிட்டு பெயரில் மோட்டார் படையணி தோன்றி அபார சாதனைகளை நிலைநாட்டியது.

சிங்கள இராணுவத்துக்கு கிட்டு மோட்டார் படையணி பேரிடியாக இருந்து வருகிறது. இப்படையணி பெருவெற்றிகளை எமக்கு ஈட்டித்தந்தது.

குடாநாட்டு மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலும் கட்டு கவனம் செலுத்தி செயற்றிட்டங்களில் ஈடுபட்டார். எமது பொருளாதாரத்தை எம்மால் பெற்றுக்கொள்ள முடியும் என நம்பிக்கையுடன் செயற்பட்டார்.

நாம் பல தியாகங்களைச் செய்தாலும் சிங்கள தேசம் ஏமாற்று வேலைகளைச் செய்துதான் வருகிறது. சமாதான முயற்சிகள் தற்போது தடைப்பட்டுள்ளமை கடந்த காலங்களில் சிங்கள தேசத்தின் ஏமாற்று வேலைகள் இருந்து வந்துள்ளன.

ஒன்றுபட்ட சக்தியாக நாம் அனைவரும் செயற்படவேண்டும். ஒன்றுபட்டுத் திரள்வதன் மூலம்தான் எமது விடுதலையைப் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

**கடற்றொழிலாளர் சமாசச் செயலாளர்**

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் எஸ்.சூரியகுமாரன் பேசுகையில் -

இந்தியா எமக்கு இழைத்த துரோகத்தனத்துக்கு தீருவில் சதுக்கம் எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இந்தியாவின் சதியினால் வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகள், கேணல் கிட்டு உட்பட 10 வீர வேங்கைகள் ஆகியோரின் நினைவிடங்கள் ஒன்றாக தீருவிலில் அமைந்துள்ளமை இதனை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

புலிகள் போராட்டத்தில் மட்டுமல்ல அரசியல் நடத்துவதிலும் வல்லவர்கள் என்பதை சர்வதேசமே இன்று ஏற்றுக்கொண்டுள்ளது. பல இழப்புக்களின் மத்தியிலும் சமாதானத்தை நிலைநாட்ட புலிகள் சகித்துக்கொண்டிருக்கிறார் என்பதை உலகம் உணர்ந்துள்ளது - என்றார்.

யாழ். மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கொள்கை முன்னெடுப்புச் செயலாளர் எம்.கே.ஈழவேந்தனும் இதில் உரையாற்றினார்.

(எ-70-118-173)

# மணல் ஏற்றிய இருவர் அரியாலையில் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.18

அரியாலை மணியந்தோட்டம் பகுதியில் தனியார் காணி ஒன்றில் இருந்து சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்செல்லமுற்பட்டதாக இருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ். பொலீஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து அங்கு சென்ற பொலீஸ் கோஷ்டி ஒன்று இருவரையும் கைதுசெய்தது.

கைதுசெய்யப்பட்டவர்களான இராசையா பிரதீபன், புவனேந்திரன் மயூரன் ஆகியோர் யாழ். நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன் ஆஜர்செய்யப்பட்டனர்.

இருவரையும் எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

மணல் ஏற்ற முயன்ற உழவு இயந்திரத்தையும் பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

(ம-3)

# ஆலய விக்கிரகங்களுடன் மானிப்பாயில் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.18

மானிப்பாய் பகுதியில் இரவு நேரத்தில் ஆலய விக்கிரகங்களுடன் சென்ற நபர் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

வழமையான இரவு ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த மானிப்பாய் பொலீஸார் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞன் ஒருவனை மறித்துச் சோதனை மேற்கொண்டனர்.

அந்த இளைஞனிடம் ஆலய விக்கிரகங்களும் ஆலயப் பொருள்களும் இருப்பதைக் கண்ட பொலீஸார் அவரை விசாரணை செய்தனர். அவரிடமிருந்த பொருள்களையும் பறிமுதல் செய்தனர்.

சுந்தரம் ரஜனிகாந்த் என்ற அந்த இளைஞன் நேற்று மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(ம-3)

# விவசாய கருத்தரங்கு

தென்மராட்சி சமூக அபிவிருத்தி மன்றம், மகளிர் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் தென்மராட்சி பிரதேச விவசாயிகளுக்கான கருத்தரங்கு இன்று காலை 9மணிக்கு கொடிகாமம் அ.தக. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி என்.ஜெகதீசன தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் மகளிர் அபிவிருத்தி நிறுவனத் தலைவி திருமதி. சறோஜா சிவச்சந்திரன், தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன், வங்கி முகாமையாளர் க.பாலச்சந்திரன் மற்றும் சாவகச்சேரி விவசாய போதனாசிரியர் உட்பட பலர் கருத்துரை வழங்க உள்ளனர்.

கலந்துரையாடலின் இறுதியில் இப்பகுதி விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்களும் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-5)

### பொதுத் தேர்தல் நடைபெற்றால்

# புலிகள் ஆதரவுக்கட்சியும், ஜே.வி.பியும் பெரு வெற்றியைப் பெற்றுவிடுமாம்

## சிஹல உறுமய தலைவர் தெரிவிப்பு

கொழும்பு,ஜன.18

நாட்டில் பொதுத்தேர்தல் ஒன்று நடைபெற்றால் விடுதலைப் புலிகளின் ஆதரவு பெற்ற அரசியல் கட்சியும், ஜேவிபி. கட்சியுமே பெருவெற்றி பெறும்.

சிஹல உறுமய கட்சியின் தலைவர் திலக் கருணாரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார் என கொழும்பில் இருந்து வெளியாகும் 'நவமணி' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற நிலையில் பொதுத்தேர்தல் நடைபெற்றால் கடந்த காலங்களைப் போன்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியோ அல்லது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸோ ஆட்சியைத் தீர்மானிக்க முடியாது.

எனவேதான், புலிகளின் ஆதரவு பெற்ற கட்சியும் ஜே.வி.பியும் ஆட்சியைத் தீர்மானிக்கக்கூடிய நிலையில் உள்ளன.

இதன்படி இரு கட்சிகளும் தலா 25.ஆசனங்களைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. இவ்வாறான நிலையில் புலிகள் சார்ந்த கட்சிகளுடன் சேர்ந்து நாட்டின் ஆட்சி அமைக்கப்படும்போது விடுதலைப் புலிகளின் தாயகம் உருவாகிவிடும். ஜே.வி.பியுடன் சேர்ந்து ஆட்சி அமைத்தால் நாட்டில் அராஜகம் தலை விரித்தாடும். - என்றுள்ளது.

(எ-10)

# பொங்கல் நிகழ்ச்சி ஒளிபரப்பு

யாழ்ப்பாணம்,ஜன.18

சக்தி தொலைக்காட்சி ஆதரவில் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலும் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்திலும் நடத்தப்பட்ட பொங்கல் விழா மற்றும் கலை நிகழ்ச்சிகளின் தொகுப்பும் பட்டிப் பொங்கல் தினத்தின் தொகுப்பும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் ஒளிபரப்பாக உள்ளது. (ம)

| | | | |
|---|---|---|---|
| செவ். | ரா. | | சனி |
| வெ. | இராசிச் சக்கரம் | | |
| கு. ▲ | | | வியா. |
| புதன் | சந். | கே. | |

# இந்த வார இராசி பலன்

## 18-01-2004 - 24-01-2004

**மாற்றம் :**

18-01-2004இல் அனுஷம் - விருச்சிகம் இராசியில் சந்திரன் நிற்கும்.

19-01-2004இல் மேடத்தில் செவ்வாய் மாறும்.

தெற்கில் அரசியல் கருத்துக்களால் மாறுபட்ட நிலை தோன்றி அமைதி கெடும். உலகநாடுகளின் அழுத்தமும், இந்தியாவின் செல்வாக்கும் அதிகரிக்கும். இந்தியாவின் பொருளாதாரவளம் அதிகரித்தாலும் வன்முறைகள் வடக்கே திட்டமிட்டு நடக்கும். மத்திய கிழக்கில் வன்செயல்கள் அதிகரிக்கும். இந்து, அராபிய கடலில் காற்றழுத்தம் மேலிட்டு மழைவீழ்ச்சி சில இடங்களில் விட்டு விட்டுக்கொடுக்கும்.

### மேடம்

விதியின் விளையாட்டு நடக்கும். வாகனம், வீடு எனச் செலவு செய்வீர்கள். எதிர்ப்பாலாரின் அபிப்பிராயம் மாறுபடும். பிரயாணங்கள் கொடுக்கும். பெற்றோருக்கு உதவி செய்தல், சகோதரங்களுடன் அபிப்பிராய பேதமேற்படும். பொருள் செலவு வந்தாலும் அதனால் வருட காலத்தில் இலாபம் அடைவீர்கள். சளித்தொல்லை, வாய்வுத் தொல்லை கொடுக்கும். வியாபாரிகள், போக்குவரத்துச் செய்பவர்கள், பத்திரிகைத்துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: திங்கள்.*

### இடபம்

வெள்ளிக் கிரகம் 10இல் கேந்தரமேறி இருப்பதனால் தொழில் நிலையில் மாற்றங்கள் கொடுக்கும். எதிர்ப்பாலார் உதவிகள் செய்து தருவர். புதிய திட்டம் - புதிய தொழிலை நாடுவது பற்றி அதிக யோசனைகள் வரும். சனீஸ்வரன் தாக்கத்தால் தடைப்பட்டபடி இருந்த ஒரு பொருள் சம்பந்தப்பட்ட விஷயம் தானாக சாதக சூழ்நிலை ஏற்படச் சந்தர்ப்பம் உண்டு. குடும்பத்தில் ஒருவருக்கு சுபமங்களப் பேச்சு நடக்கும். சலவருத்தம், கைகால் தாக்கம் ஏற்பட இடமுண்டு. சந்தைத் தொழில், தோட்ட வேலை செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன் (மத்தியானம் மட்டும்)*

### மிதுனம்

கட்டிய தாரமும், தொட்டிலன் பிள்ளையும் எதிர்ப்பார்கள். உங்கள் கருத்துக்களை தூக்கி எறிவார்கள். அடிக்கடி வாக்குக்கலகம் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் பொறுமையாக இருக்கவும். அல்லது வினைத்திறன் மிக்க தொழிலாளர்களை இழக்க நேரிடும். பொருள் வரும். வீடு, வாகனச்சுகம் வரும். செலவுகள் அதிகரிக்கும். பிரயாணங்களை பின் போடுங்கள். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். சகோதரத்திடம் கொடுத்த பொருளை வாங்கமாட்டீர்கள். வாய்வுத்தொல்லை, சளி வரும். ஆசிரியர்கள், பிரயாணத்துறை, செய்தி, பத்திரிகைத்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: திங்கள், வியாழன் (மத்தியானம் மட்டும்)*

### கடகம்

அதிக சுகம் தேவைப்படுகின்றது உங்களுக்கு. அதற்காக அதிகவிலை கொடுக்க நேரிடும். கிடைத்ததைக் கொண்டு, பக்கத்தில் இருப்பதை வைத்து உருவாக்குங்கள். மாறிய மனத்தால் தேடிய பொருள் போகும் நிலை ஏற்படும். உறவினர் ஒருவரின் வருகை, அவரின் ஆலோசனைப்படி நடவுங்கள். அதிகாரத்தனம், பேச்சின் வேகம், பீடிவாதத்தால் சகோதரங்களுடன் முரண்டுபிடித்து வேதனைப்படுவீர்கள். நண்பர்கள் உதவிகள் செய்வார்கள். அரசியல் வாதிகள், பாதுகாப்புத்துறையினர், கணனித்துறையினர் பல மாற்றங்களைச் செய்து நன்மை பெறுவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: வியாழன்.*

### சிங்கம்

என்ன தடுமாறுகின்றீர்களாமே? கெட்டவர்கள் புத்தி சொல்லுவார்கள் வீட்டில் பொருளை நோட்டமிடும் சிலர் திட்டமிடச் சந்தர்ப்பங்கள் உண்டு. கவனமாகச் செயற்படுங்கள். உதயத்தவன் சூரியன் ஆறில் மறைவதனால் அடிக்கடி மறதி, சளித்தொல்லை, தந்தை வழியினரின் ஏறிகனைச் சொற்களால் மனவேதனை வரும். உடலைக்கவனியுங்கள். கிருமித்தண்ணீரைக் குடித்து வயிற்று வருத்தத்தை தேடாதீர்கள். குடும்பத்தினரிடையே அபிப்பிராய பேதங்கள் வந்து யோசித்தபடி இருப்பீர்கள். கால் விறைப்பு சரிவரும். மருந்து எடுக்கலாம். குருத்தொழில், சந்தை வியாபாரம், போக்குவரத்துத் துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிஷ்டநாள் : வியாழன்*

### கன்னி

அன்று தாலி பெண்களுக்கு வேலி என்பார்கள். இன்று தாலி, சங்கிலி பறித்து ஹீரோ ஹொண்டா, ரீ.வி.எஸ். ஓடும் இளம் சமுதாயம் உருவாகும் காலமாகும். எனவே, வீட்டில் இருக்கும் பொருள் றோட்டில் வரும் பொழுது பிரச்சினைகள் உருவாகின்றது. வெளிநாட்டுப் பணத்தில் றோட்டில் ஓடித்திரிவதனால் பல பிரச்சினைகள் உங்களுக்கும் வரலாம். எதிலும் நிதானம். அடுத்தவீட்டுக்காரருக்கு மன உழைச்சலை ஏற்படுத்தாதீர்கள். பணவரவு, அதிக யோசனை, புதிய திட்டம், சகோதரர்களுக்கு நன்மைகள் ஏற்படும். கிருமித் தாக்கத்தால் தலை, வயிற்று உபாதைகள் வரும். பெற்றோரின் சகோதரர்களுக்கு நல்லதல்ல. வாய்வு வருத்தங்கள் வரும். புத்திரர் சிறப்பு மகிழ்ச்சியைத்தரும். காணி பூமியில் செலவு வரலாம். இடமாற்றங்களை தவிர்க்கவும். வியாபாரிகளுக்கு நன்மைகள் கிடைக்கும்.

*அதிஷ்டநாள்கள்:திங்கள், வியாழன்.*

### துலாம்

உள்ளத்தில் தெளிவு - உடன்பிறந்தவர்களுக்கும், பிள்ளைகளுக்கும் நன்மைகள் ஏற்படும். திட்டமிட்ட செயலால் வருமான அதிகரிப்பு, புதிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். தூரத்திலிருந்து நற்செய்திகள் ஓரளவு மன ஆறுதலைத் தரும். இடமாற்றங்கள் நன்மை கொடுக்கும். வயிற்று நோ, நாரிநோ, கால் உளைவு கொடுக்கும். தகுந்த வைத்தியம் செய்யுங்கள். பொறுப்பான பதவி, முன்னேற்றம், சிலருக்குப் பிரயாணம், கல்வியால் நன்மை என்பன ஏற்பட இடம் உண்டு. சந்தைத் தொழில், சட்டத்தொழில் செய்பவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிஷ்டநாள்கள் : திங்கள், வியாழன்.*

### விருச்சிகம்

சாக்குப் போக்குச் சொல்லி சமாதானப் பேச்சு நடத்தும் தெற்கு அரசியல் வாதிகளைப் போன்று நடவாதிகள், போராடினால்தான் நீதி கிடைக்குமென்றால் போராடாமல் இருக்கமாட்டீர்கள். தொழில் நிலை மந்தமடையும். தூரத்து இடங்களுக்கு போகாதீர்கள். போனால் பல இழப்புக்கள் தேடிவரும். குடும்பத்தின் நிலை உயரப்பாடுபடுவீர்கள். இடதுகையில் நோ வரலாம். சலவருத்தம், தொண்டை நோ வரும். இனஜனங்களால் நன்மைகள் அதிகரிக்கும். அரச அதிகாரிகள் உதவி செய்வர். பொருளில் நிதானமாக இருக்கவும். அயலவர்கள் தொல்லை தருவார்கள். வியாபாரிகள், இரும்புத் தொழில் செய்பவர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

### தனுசு

உதயத்து வியாழன் சிங்கத்திலிருந்து பார்வை. குடும்பத்தினருக்காக ஓடியாடித்திரிந்த நன்மைகள் செய்வீர்கள். புத்திரர்கள் சிறப்பு அடைவார்கள். நன்மைகள் செய்யும் உங்களுக்கு பல உதவிகள் கிடைக்கும். கெட்டவர்களின் ஆலோசனைகளால் நல்லவர்களைப் பகைக்காதீர்கள். கலகலப்பாக இருப்பீர்கள். ரீவி, கணனிக்காக செலவுகள் அதிகரிக்கும். பிரயாணங்களை தவிர்க்கவும். உங்கள் செல்வாக்கால் சில அலுவல்கள் செயற்படுத்தி வெற்றி காணுவீர்கள். பொருள்களைப் பிறரிடம் கொடுக்கும் பொழுது எழுத்தில் கொடுங்கள் அல்லது பொருள் தவறும். சந்தைத் தொழில், குருத்துறை, பாதுகாப்புத்துறையினர்கள் நன்மை அடைவர்.

*அதிஷ்டநாள்கள்:திங்கள், வியாழன்.*

### மகரம்

மனதில் பட்டதெல்லாவற்றையும் சொல்லி வீண் பகைமையைத் தேடிக்கொள்ளாதீர்கள். தொழில் ஸ்தானத்தில் புதிய மாற்றங்கள் ஏற்படும். பணவரவு கொடுக்கும். குடும்பத்தினருக்கு நல்லது நடக்கும். தாயாரின் உடல்நிலை பாதிப்புக் கொடுக்கும். அயலவர்கள் தொல்லைகள் தருவார்கள். தூரத்திலிருந்து சகோதார முறையினர்கள் நற்செய்திகள் சொல்லுவார்கள். குருத்தொழில் செய்பவர்களுக்கு புதிய பொறுப்பு வரலாம். வீடுமனை சம்பந்தமான செலவுகள் கொடுக்கும். தூரத்துப் பிரயாணங்களை தவிர்க்கவும். கால் உளைவு, சளித்தொல்லை வரும். வைத்தியம் செய்து சுகமடையவும்.

*அதிஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

### கும்பம்

சவ் பதவிகளிலிருந்து தமது குற்றங்களிலிருந்து தம்மை பாதுகாக்க பல நல்லவர்களை பகைத்து அவர்கள் மீது வீண் பழி சுமத்துகின்றார்கள். இது நியாயமா? என மக்கள் கேட்கின்றார்கள். குருபீடங்களில் இருப்பவர்கள் கவனமாக நடக்கவேண்டும். உங்கள் தொழில் ஸ்தானத்திலும் கவனமாக இருங்கள். சில பிரச்சினைகளை நீங்கள் சந்திக்கநேரிடும். பணவரவு கொடுக்கும். தொழிலில் மேலதிகாரிகள் உதவிசெய்வார்கள். பிள்ளைகளுக்காக ஓடியாடித் திரிவீர்கள். சகோதரரின் உடல் நிலை பாதிப்புவரும். பிரயாணங்களைத் தவிர்க்கவும். வயிற்றுநோ, கால் வருத்தம் கொடுக்கும். குருத்துறை, பிரயாணத்துறை, அரசியல்துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் கொடுக்கும்.

*அதிஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்*

### மீனம்

உதயத்தில் குசன் (செவ்வாய்) உதயாதிபதியான குரு 6 இல் இருப்பதனால் எடுத்த காரியம் தடை, தாமதமாகும். தொழில் ஸ்தானத்தில் புதிய பிரச்சினைகள் வரும். வருமானச் சிறப்பு கொடுக்கும். சகோதரவழி உதவிகள் கிடைக்கும். இனஜனம் நன்மை செய்யும். நண்பர்கள் பகைப்பர். வீண்பழி சுமத்துவர். காணி பூமி சம்பந்தமான பிரச்சினைகள் கொடுக்கும். வீடு மனை, வாகனச் செலவுகள் அதிகரிக்கும். கால் வருத்தம், சளித்தொல்லை, கண் கூச்சம் கொடுக்கும். வியாபாரிகள், வைத்தியத் துறையினர், பிரயாணம், கடல் துறையினர் நன்மை அடைவார்கள்.

*அதிஷ்டநாள்கள்: திங்கள், வியாழன்.*

**மகாதேவா ஜோதிடம்**

---

# நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம்,ஜன.18

நல்லூர் பிரதேச சபைப்பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் நாளை திங்கட்கிழமை முதல் வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த்தடுப்பூசி ஏற்றப் படவுள்ளது.

தடுப்பூசி வழங்கப்படும் இடம், திகதி பற்றிய விவரம் வருமாறு:-

★ நாளை திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம் 11மணி வரை திருநெல்வேலிச் சந்தியில் உள்ள வை.எம்.எச்.ஏ. கட்டடம்

11.30மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை திருநெல்வேலி அம்மன் வீதியில் உள்ள காளி கோயிலடி சனசமூக நிலையம்.

★ நாளை மறுதினம் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.30 மணி வரை நல்லூர் பிரதேச சபைக் கட்டடம்.

11மணி தொடக்கம் 12மணி வரை திருநெல்வேலி முருகன் வீதியில் உள்ள பாரதி சனசமூக நிலையம்.

12.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை திருநெல்வேலி பாற்பண்ணை வீதியிலுள்ள கம்பன் சனசமூக நிலையம்.

21ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.30மணிவரை திருநெல்வேலி இராமலிங்கம் வீதியிலுள்ள வாலையம்மன் சனசமூக நிலையம்.

11மணி தொடக்கம் 12மணி வரை சிவன் வீதி, திருநெல்வேலியிலுள்ள முத்துமாரியம்மன் கோயிலடி.

12.30மணி தொடக்கம் 1.30மணி வரை திருநெல்வேலி பிள்ளையார் வீதியிலுள்ள கலைச்சுடர் சனசமூக நிலையம்.

22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணி தொடக்கம் 10.30 மணி வரை கல்வியங்காடு இலங்கநாயகி சனசமூக நிலையம்.

11மணி தொடக்கம் 12மணி வரை கல்வியங்காடு கலைமகள் சனசமூக நிலையம்.

12.30 மணி தொடக்கம் 1.30 மணிவரை திருநெல்வேலி சட்டநாதர் வீதியில் உள்ள கலைத் தமிழ் கலாமன்ற சனசமூக நிலையம்.

(எ-7)

## நல்லூரில் சமயப் பாடசாலை

யாழ்ப்பாணம்,ஜன.18

பூரண யோக சமாஜத்தின் சிவானந்தா சிறுவர் சமயப் பாடசாலை எதிர்வரும் 22ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்கு யாழ். திவ்யஜீவன சங்க மண்டபத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பாடசாலையில் இணைய விரும்புவோர் நாளை திங்கட்கிழமை பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-10)

ஊடகங்களிடம் கூறிக்கொண்டிருப்பதால் பயனில்லை

# ஜனாதிபதி பதவிக்கால சர்ச்சை குறித்து ஐ.தே.க. நீதிமன்றம் செல்ல வேண்டும்

## பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்

கொழும்பு,ஜன.18

"ஜனாதிபதியின் பதவிக்காலம் 2005ஆம் ஆண்டில் முடிவடைகிறது என்று ஐ.தே.கட்சியினர் ஊடகங்களிடம் தெரிவிப்பதால் எந்தவித நன்மையும் இல்லை. ஜனாதிபதியின் பதவிக்கால சர்ச்சை குறித்து ஐ.தே.க.நீதிமன்றத்துக்குச் செல்லவேண்டும்" என்று பொ.ஐ.மு. ஊடகப் பேச்சாளரான சரத் அமுனுகம எம்.பி. கூறினார்.

பொ.ஐ.முன்னணியின் செய்தியாளர் மாநாட்டில், ஜனாதிபதி இரண்டாவது தடவையாகவும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி இரண்டாவது தடவையாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டது இரகசியமான முறையில் அல்ல. அவர் பதவிப்பிரமாணம் செய்து கொண்ட திகதி தெரியாது. அந்தத் திகதியை அடுத்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்போம்.

1999ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஜனாதிபதி குண்டுத் தாக்குதலுக்கு உள்ளாகி ஒரு கண்ணை இழந்தார். ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதி தனது கடமையை ஆற்றக்கூடிய உடல் நிலையில் இல்லை என்ற வதந்தியைக் கட்டவிழ்த்துவிட்டது. இதனால் நாட்டு மக்கள் குழப்ப நிலையில் இருந்தனர். இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவே அப்போதைய பொ.ஐ.மு. அமைச்சரவை ஜனாதிபதி பதவியேற்க வேண்டுமெனத் தீர்மானித்தது. இதன்படி 1999ஆம் ஆண்டு டிசெம்பர் 22ஆம் திகதி ஜனாதிபதி பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பதவிப்பிரமாணம் இரகசியமான முறையில் நடைபெறவில்லை. பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன்னிலையிலேயே இடம்பெற்றது.

*செய்தியாளர்:-* எப்போது, எங்கு நடைபெற்றது?

*சரத் அமுனுகம, மங்கள் சமரவீர:-* எங்கே நடைபெற்றால் என்ன? எங்கு நடைபெறவேண்டுமென்பதை ஜனாதிபதியே தீர்மானிப்பார். அந்த அதிகாரம் அவருக்கு இருக்கிறது. எப்போது நடைபெற்றதென்பது ஞாபகமில்லை. சரியாகத் தெரிந்துகொண்டு அடுத்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவிக்கின்றோம்.

- இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## வெள்ளிவிழா

யாழ்ப்பாணம்,ஜன.18

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் 25ஆவது ஆண்டு வெள்ளிவிழாவும், வருடாந்தப் பொதுக் கூட்டமும் இன்று காலை 9மணிக்கு சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் மன்றத் தலைவர் பி.என்.சற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில், அமரர் ச.நமசிவாயம் நினைவாக புலமைப் பரிசில் வழங்கல், வெள்ளிவிழா மலர் வெளியீடு, வெள்ளிவிழாக் கண்ட வணிகர்கள் கௌரவிப்பு ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

(எ-10)

## உப அலுவலகம் இடமாற்றம்

அச்சுவேலி,ஜன.18

வலி.கிழக்கு பிரதேச சபையின் அச்சுவேலி உப அலுவலகம் சந்நிதி வீதி, பத்தமேனியில் உள்ள தனியார் கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி உபஅலுவலகம் இதுவரை காலமும் அச்சுவேலி பொதுச் சந்தைக் கட்டடத்தின் மேல்மாடியில் இயங்கி வந்தது. (எ-11)

நீங்கள் பினிசம், பீனிச வாய்வு, இளநரை, தலைப்பிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் எல்லாவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்!

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணி தைலம்**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road,
Chilaw.
(Reg.No.:-6382)AR/PR/No.-228

யாழ்.மாவட்ட
ஏக விநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி இல.-021-222-2567

(குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-32386)



நீங்கள்,
நீரிழிவு நோயினால் அவதிப்படுகிறீர்களா? இதோ உடன் நிவாரணி

**"மதுமேகரணி"**

**"MADHUMEAHAHARANEE"**

இந்த மருந்தின் பலாபலனை குறுகிய காலத்தில்அறிந்துகொள்ளலாம்.
உங்கள் அண்மையில் உள்ள சித்தஆயுர்வேத டாக்டரிடம்
ஆலோசித்து பாவிக்கவும்.
இது ஓர் அரச ஆயுர்வேத மருந்துக் கூட்டுத்தாபனத் தயாரிப்பு
யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், பெற்றுக்கொள்ளலாம்.

வடமாகாண ஏகவிநியோகஸ்தர்கள
**சிவா நறுமணப்பூங்கா**
288. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம.

SRI LANKA AYURVEDIC-CORPORATION
P.O. BOX 20. NAWINNA
MAHARAGAMA.

(சி-32387) குறிப்பு: சத்திரச்சந்திக்கு அருகில்



**JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY**
Vaddukoddai, Sri Lanka

**Diploma Course in Civil Draughtsmanship**

| | |
|---|---|
| Commencement:- | 21st January 2004 |
| Duration: | 1 Year |
| Fees: | 1800/- |
| Facilities: | Library, Hostel & Sports |

For application forms and details contact:
Director
**Jaffna College Institute of Technology**
**Vaddukoddai.**

email - Jcit @ slt net.lk
Tel.Phone: 060 2213139 (21-18-14) (C/32819)


# அச்சுவேலி ஆஸ்பத்திரியில் புதிய கட்டடம்

வலி.கிழக்கு,ஜன.18

அச்சுவேலி சுற்றயல்கூறு வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவுக்கென 95 லட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது என வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.விமலேந்திரன் தெரிவித்தார்.

வெளிநோயாளர்பிரிவு மற்றும் நிர்வாக அலுவலகங்கள் என்பவற்றை இயக்குவதற்கு போதிய இடவசதி இல்லாதநிலை இருந்து வந்தது.

இதனை அடுத்தே இந்தக் கட்டடத்தை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-180)


**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள சைனிஸ் அச்சு இயந்திரம், Proof இயந்திரம் மற்றும் தளபாடங்கள், எழுத்துக்கள் என்பன விற்பனைக்குண்டு.

தினமும் காலை 6.00 முதல்
8.00 மணி வரை.
பிற்பகல் 3.00 முதல்
6.00 மணி வரை.

தொடர்பு:
N.குலநாயகம்
சந்தை லேன்,
ஆவரங்கால்.
(சி-32902) (18-19-21)

**தேவை**

எமது திரையரங்குக்கு பின்வரும் பதவிகளுக்கு ஆள்கள் தேவை.

1. காசாளர்
2. கிளார்க்
3. ஒப்பரேற்றர்
4. ஒப்பரேற்றராகப் பழகவிரும்புபவர்கள்.


தங்குமிட வசதி உண்டு.

எதிர்வரும் 21.01.2004 புதன்கிழமை காலை 9.00மணிக்கு நேரில் வரவும்.

**நிறைஞ்சனாஸ் திரையரங்கு**
206, பொன்னாலை வீதி ,
சங்கானை.
(சி-32815)(36)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 28 | 15 |
| - | - |
| 08 | 12 |
| - | - |
| 1967 | 2003 |



செல்வன்

## சோமசுந்தரம் திருவருட்செல்வன்

காற்றோடு வந்த செய்தி கனவெனவே பேசாதோ?
கலங்கி வாடுகிறோம் - உன்னைக்
கண்ணீரில் தேடுகின்றோம்.
கள்ளம் கபடமற்ற உன்னைக் கண்வைத்தானோ காலன்?
கருவாய் கவர்ந்தெடுக்க கல்நெஞ்சங் கொண்டானோ?
வெள்ளை மனம் கொண்ட உன் உள்ளம்
யமனைக் கலைத்துவிட எண்ணவில்லை.
எம்மையெல்லாம் ஏங்கித் தவிக்கவிட்டு
எங்கு சென்றாயோ திருவே?
மெழுகு போல உன்னை உருக்கி
எம்மையெல்லாம் வாழவைத்தாயே!
உனது பிரிவு எம் செந்நீரைக்
கண்ணீராக மாற்றியது
இறைவனோடு சங்கமித்த உன்னைச்
சாந்திப் பூக்கள் தழுவட்டும்!
*ஓம்சாந்தி! ஓம்சாந்தி!! ஓம்சாந்தி!!!*

இன்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில நடைபெறும் மறைந்த திருவருட்செல்வனின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மற்றும் நண்பகல் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

50/06, செட்டித்தெரு,
நல்லூர்.
☎: 0776015311. (27235) (34-21-19-18)

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மாமா, மாமி, சகோதரர்கள், மைத்துனர்கள், மருமக்கள், பெறாமக்கள்.

# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| அன்று | இன்று |
|---|---|
| 1956 | 2003 |
| - | - |
| 04 | 12 |
| - | - |
| 12 | 15 |
| மண்ணில் விளைந்தவர் | விண்ணில் கலந்தவர் |



இயேசுவின் அடியான்

## அமரர் வேலுப்பிள்ளை யோகரட்ணம்

மேருவின் நேராகக் கண்களை ஏறெடுத்து
இயேசுவின் பாதம் சேர எனச்சொல்லிச் சென்றிட்டீர்கள்
அவரது பக்தர் கூட்டம் அன்போடு வரவழைக்க
பாவம்தனிய சுமையிறக்கிப் போனீர்கள் அப்பா! நாங்கள்
காலத்தை இருளாயாக்கிக் கண்ணீரைக் குணமாயாக்கி
வாழ்வதைப் போராயாக்கி வாழாமல் வாழுகிறோம்!
விண் ஆசி எங்களிலே வந்துமே படியும்வரை
மண்வாசி எங்களுக்கு மீட்சியே இல்லை அப்பா!
கர்த்தரின் சிறகுக்குள் அடைக்கலம் புகுந்த
உங்களின் நினைவோடு நாம்.

"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான" யோ 11-25.
"வழியும் உண்மையும் வாழ்வும் நானே
என் வழியாயின்றி எவரும் தந்தையிடம் செல்வதில்லை" யோ 14-14.

19.12.2003 அவரது இல்லத்தில் நடைபெற்ற நல்லடக்க ஆராதனையில் பங்குபற்றி எங்களுக்கு சகலவிதத்திலும் உதவிகள், ஒத்தாசைகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எங்கள் நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை எங்கள் இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் எங்கள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்பாய் அழைக்கின்றோம்.

தெற்கு நவாலியூர், - அன்பு மனைவி, பிள்ளைகள்.
மானிப்பாய். (27237)(34-21-19-18)


**விவசாயிகளே!**

உங்களுடைய
மிளகாயில் ~ இலைச்சுருட்டியா
தக்காளியில் ~ வெட்டுப்புழுக்களா
கோவாவில் ~ இலையரி புழுக்களா
கத்தரியில் ~ காய்துளைப்பான்களா
கவலையை விடுங்கள்!




இவற்றைக் கலைக்கிறேனென வருகிறது

**கல்க்ரோன்** 500 ஈ.சி

புரோபெனோபொஸ் உள்ளடங்கிய சக்திவாய்ந்த கிருமிநாசினி
விவரங்கள் கொள்கலனின் வெளிப்புறத்தில்

**ஹரிசன்ஸ் கெமிக்கல் (பிறைவேற்) லிமிரெட்**
இல.07, பிறேபுறுக் பிளேஸ்,
கொழும்பு - 02.

கிடைக்கும் இடம்:
முன்னணி வாய்ந்த விவசாய இரசாயன விற்பனை நிலையங்கள்



யாழ். தொடர்புகளிற்கு:-
தொழில்நுட்ப விற்பனைப்பிரதிநிதி.
**எஸ்.கே.சாமி அன்சன்ஸ்**
235, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(34-21-18-19) (C/32788)

கிருமிநாசினிகள் ஆபத்தானவை: அவதானமாகப் பயன்படுத்தவும்.

உதயன்

## நீதி நிலைநாட்ட ஒத்துழைப்புத் தேவை

குடாநாட்டில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போனோர் விவகாரத்தில் குற்றமிழைத்த படையினர் எவராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக எடுக்கப்படுகின்ற சட்ட நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கப்படும்.

யாழ்ப்பாணத்தின் புதிய படைத்தளபதியான மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளிடம் இவ்வாறு உறுதிபடக் கூறியிருக்கிறார் எனத் தகவல் வெளியாகி இருக்கின்றது.

யாழ். நகரில் உள்ள படையினரின் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதிகளையும் அன்னையர் முன்னணிப் பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடியபோதே தளபதி இதனைத் தெரிவித்திருக்கிறார்.

தமது கணவன்மார்களை இழந்த பெண்களைக் காணும் போது எனது சகோதரிகளுக்கு நடந்த சம்பவமாகவே இதனை எண்ணுகின்றேன். இந்தக் கைதுச் சம்பவங்களுடன் எந்த அதிகாரி தொடர்புபட்டிருந்தாலும் அவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள் - என்றும் தளபதி சந்திரபால பெற்றோர்களிடமும் உறவினர்களிடமும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் பல நூற்றுக்கணக்கானோர் காணாமற்போன பேரவலம் தொடர்பாக இராணுவத் தரப்பில் இதுபோன்று அனுதாபம் கலந்த வார்த்தைகள் தெரிவிக்கப்படுவது இதுதான் முதற்றடவை அல்ல. பல படை உயரதிகாரிகளும் நாட்டின் அரசுத் தலைவர்களும்கூட இப்படி பலதடவைகள் பல்வேறு விதமாக அனுதாபம் தெரிவித்துவிட்டனர். ஆனால், தங்கள் பிள்ளைகளை, கணவன்மாரை பறிகொடுத்த பல நூற்றுக்கணக்கான பெற்றோர்கள், மனைவிமார் மற்றும் உறவினர்களின் மீளாத்துயரத்துக்கு இன்னும் முடிவுகிட்டவில்லை. "பிள்ளைகள் உயிருடன் இல்லை என்பதையாவது திட்டவட்டமாகக் கூறுங்கள். அவர்களது இறுதிக்கிரியைகளையாவது நிறைவேற்றி ஆறுதலடைகிறோம்" என்றுகூட அவர்கள் கெஞ்சிக் கேட்டுவிட்டார்கள்.

ஆனால், இந்த மனிதப் பேரவலமான விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்படுமா என்பதில் சந்தேகங்கள்தான் வலுக்கின்றன.

வடக்கில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு கடந்த ஆண்டு இறுதியில் தனது விசாரணை அறிக்கையைச் சமர்ப்பித்திருந்தது.

முதற் கட்டமாக 1990இற்கும் 1998இற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வவுனியா, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கைதானபின்னர் காணாமற்போன 281 பேர் தொடர்பாக விசாரணைக்குழு தனது பணியை முடித்திருந்தது. இந்த 281 பேரில் 25 முஸ்லிம்கள் தவிர எஞ்சிய 256 பேர் பெரும்பாலும் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட பின்னரே காணாமற்போயிருக்கின்றனர் என்ற முடிவுக்கு வந்த விசாரணைக்குழு, இந்த 256 தமிழர்களும் காணாமற்போன சம்பவங்களோடு சம்பந்தப்பட்டவர்கள் எனக் கருதப்படும் 37 படையினரின் விவரங்கள் அடங்கிய பட்டியல் ஒன்றையும் இராணுவ தலைமைப் பீடத்திடம் சமர்ப்பித்திருந்தது. அதுமட்டுமன்றி, அவர்கள் 37 பேருடனும் தொடர்புகொள்வதற்கு தமக்கு வசதி செய்துதருமாறும் இராணுவத் தலைமைப் பீடத்திடம் அது கோரியது. ஆனால், அந்த 37 பேரில் ஒருவரைக்கூட விசாரணைக்குழு முன் நிறுத்த இராணுவத் தலைமையினால் முடியவில்லை. விசாரணைக்குழு சமர்ப்பித்த விவரங்கள் சம்பந்தப்பட்டோரை இனங்காண - அடையாளப்படுத்த - போதுமானவை அல்ல என்று தெரிவித்து தனது பொறுப்பைத் தட்டிக்கழித்துவிட்டது இராணுவம்.

ஆள்கள் காணாமற்போன சம்பவங்கள் இடம்பெற்ற காலப்பகுதியில் அவற்றில் சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் பணியாற்றிய முகாம், அமைந்த பிரதேசம், அவர்கள் கடமைபுரிந்த காலம், அப்பகுதி மக்களால் அவர்கள் அழைக்கப்பட்ட பெயர்கள் என்பன போன்ற பல விளக்கங்களுடன் கூடிய முழு விவரங்களை விசாரணைக்குழு சமர்ப்பித்த பின்னரும் அவர்களில் ஒருவரைக்கூட அடையாளம் காணமுடியவில்லை என்று கையை விரித்துவிட்டது படைத்தரப்பு.

இந்தப் பின்னணியில் யாழ். படைத்தளபதி சந்திரபால தெரிவித்திருக்கும் ஆறுதல் வார்த்தைகள் காணாமற்போனோரின் உறவுகளைத் திருப்திப்படுத்தப் போவதில்லை.

குற்றமிழைத்த படையினரை நீதியின் முன் நிறுத்த எடுக்கப்படும் முயற்சியில் இராணுவத்தரப்பின் அசட்டைப் போக்கு - அலட்சிய நடவடிக்கை - குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணைக்குழுவே அதிருப்தி வெளியிட்டிருக்கின்ற நிலையில், இதுவிடயத்தில் சட்ட நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்புத் தருவோம் என்று படை அதிகாரிகள் மக்கள் மத்தியில் கூறிக்கொள்வதை வெறும் சொல்லாடலாக மட்டுமே நோக்கவேண்டியுள்ளது.

இதைவிடுத்து, யாழ்ப்பாணத்தில் ஆள்கள் காணாமற்போன சம்பவங்களுடன் தொடர்புடைய இராணுவத்தினரில் ஒருவரையேனும் கண்டுபிடிக்க புதிய படைத்தளபதி உருப்படியாக ஏதேனும் நடவடிக்கை எடுப்பாராயின், யாழ்ப்பாண மக்கள் அவருக்கு நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என நம்பலாம்.

# பாதுகாப்பு அமைச்சின் அதிகாரத்தைப் பகிர்ந்து சமாதான முயற்சியை மீண்டும் ஆரம்பிக்குக!

## ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் புதிய ஜனநாயகக் கட்சி கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.18

பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்களை ஜனாதிபதியும், பிரதமரும் தமக்குள் பகிர்ந்துகொண்டு சமாதான முயற்சிகளை மீண்டும் ஆரம்பிக்கவேண்டும் என்று புதிய ஜனநாயகக் கட்சி கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது குறித்து அக்கட்சி ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் தனித் தனிக் கடிதங்களையும் அனுப்பிவைத்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு அரசிடமிருந்து பறிக்கப்பட்டதனாலேயே சமாதான நடவடிக்கைகள் தடைப்பட்டுப் போயுள்ளன. எனவே, மீண்டும் சமாதான முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு வசதியாக பாதுகாப்பு அமைச்சினை மீண்டும் அரசிடம் வழங்குவதற்கு ஜனாதிபதி முன்வரவேண்டும். அது இல்லையேல், பாதுகாப்பு அமைச்சின் சில விவகாரங்களையாவது மீள ஒப்படைப்பதற்கு சம்மதிக்குமாறு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

சமாதான முயற்சிகளிலிருந்தும் புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்தும் அரசு விலகிவிடக்கூடாது. ஜனாதிபதியிடம் சில அதிகாரங்களைப் பகிர்ந்துகொண்டு அவருடன் புரிந்துணர்வுடனும், இணக்கத்துடனும் செயற்பட்டு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க அரசு முன்வரவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# வடக்கு-கிழக்கிலுள்ள வறியமக்களுக்கு அரச காணிகளை வழங்கி உதவுங்கள்

## காணி அமைச்சருக்கு அடைக்கலநாதன் எம்.பி. கடிதம்

யாழ்ப்பாணம், ஜன.18

இடம்பெயர்ந்து சொந்தக் காணிகள் அற்றநிலையில் பல்வேறு பரச்சினைகளை எதிர்நோக்கிக்கொண்டிருக்கும் வறியமக்களுக்கு அரசகாணிகளை வழங்கி அவர்களை மீளக்குடியேற்றுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் காணி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக, காணி அமைச்சருக்கு அவர் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நாட்டின் யுத்தம் காரணமாக வன்னித் தொகுதியின் அநேக கிராமங்களிலிருந்து மக்கள் 1990ஆம் ஆண்டில் இடம்பெயர நேர்ந்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தான பிற்பாடு நாட்டில் யுத்தபீதி அகன்ற நிலையில் மக்கள் திரும்பவும் தங்கள் கிராமங்களை நோக்கி வந்துகொண்டிருக்கின்றனர்.

இடம்பெயர்ந்த நிலையில், கிராமங்களில் வசித்து வந்த குடும்பங்களின் தொகை தற்போது பல மடங்காகப் பெருகி இருப்பது கண்கூடு. இந்தக் குடும்பங்கள் சீவிப்பதற்கு இடமின்றி மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

வசதி படைத்த குடும்பங்கள் காணித்துண்டுகளை விலைக்குப் பெற்று வாழமுடிகிறது. ஆனால், வசதியற்றவர்கள் சீவிக்க இடமின்றி உறவினர்களுடன் சேர்ந்து வாழ்கின்றனர். இரண்டு, மூன்று குடும்பங்கள் ஒரு வீட்டில் வசிக்கும் நிலையில், சிறு பிள்ளைகளுக்குள் உண்டாகும் சின்னச்சின்னச் சண்டைகள் பெரியவர்கள் தலையிட்டுப் பெரிதாகும்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது. நெருக்கமாக ஒரு கூரையின் கீழ்வாழும்போது பாடசாலை மாணவர்களின் கல்விக்கும் குழப்பநிலை ஏற்படுகின்றது.

காணியற்ற வறிய குடும்பங்களுக்கு அரச காணிகள் வழங்கப்பட்டு அவர்களை மீளக்குடியமர்த்த வேண்டியது அவசியமாகும். ஆனால், ஒவ்வொரு கிராமங்களிலும் அரச குடியேற்றக் காணிகள் இருந்தாலும் காணி அமைச்சின் 01/2002 சுற்றறிக்கையின் பிரகாரம் அரச காணிகளை வழங்குவது தடைசெய்யப்பட்டிருப்பதன் காரணத்தால் பிரதேச செயலாளர்கள் காணிகளை வழங்கி மக்களை மீள்குடியேற்றம் செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணத்தில், மக்கள் மீள்குடியமர்த்தப்படவேண்டியதன் அவசியத்தை கவனத்திலெடுத்து, வடக்கு - கிழக்கு மாகாணத்தை இச்சுற்றறிக்கையிலிருந்து விலக்களித்து பிரதேச செயலாளர்களுக்கு காணிகள் வழங்கக்கூடிய உரிமத்தை வழங்கிக் காணியற்ற நிலையில் பல இன்னல்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டுமெனக் கேட்டு நிற்கிறேன் - என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-4)

# இறால் வளர்ப்புக் குறித்து யாழ்.பல்கலையில் செயலமர்வு

யாழ்ப்பாணம்,ஜன.18

யாழ்.குடாநாட்டில் இறால் வளர்ப்பில் ஈடுபடவுள்ள ஆர்வலர்களுக்கான இருநாள் செயலமர்வு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

சிலாபம் அக்குவா சேவிஸ் நிறுவனமும், யாழ். மாவட்ட போருட் நிறுவனமும் இணைந்து இந்தச் செயலமர்வை நடத்தவுள்ளன.

அடுத்தமாதம் இரண்டாம் திகதி செயலமர்வும், மூன்றாம் திகதி குடாநாட்டில் இறால் வளர்ப்பதற்கான இடங்களைத் தெரிவு செய்யும் நிகழ்வும் இடம்பெறும்.

இதற்கான, ஏற்பாடுகளை யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையம் மேற்கொண்டுள்ளது.

கடல் வள அபிவிருத்தி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் கே.சித்திரவடிவேல் இத்தகவல்களைத் தெரிவித்தார்.

இந்தச் செயலமர்வினை நடத்துவதற்கு சிலாபம் அக்குவா சேவிஸ் நிறுவனத்தின் இயக்குநர் எஸ்.தயாபரன் தலைமையிலான நிபுணத்துவக் குழு ஒன்று யாழ். வருகைதரவுள்ளது.

இந்தச் செயலமர்வில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் யாழ்பல்கலைக்கழகத்தில் உள்ள கடல் வள அபிவிருத்தி நிலையத்தில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் நிலையத்தில் ஒப்படைக்கப்படவேண்டும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-7)

# ஈர்க்குவாணத்தின் விபரீதம்: கைதடியில் வீடு தீப்பற்றியது

கைதடி,ஜன.18

பொங்கல் பண்டிகையை முன்னிட்டுக் கொளுத்திய ஈர்க்குவாணம தவறுதலாக வீட்டுக்கூரையின் மீது வீழ்ந்ததினால் வீடு தீப்பற்றியது. இந்தச்சம்பவம் பொங்கல் தினமான கடந்த வியாழனன்று கைதடி மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் இதே இடத்தைச்சேர்ந்த ஐயங்கன் சோமசுந்தரம் என்பவரின் வீடே இவ்வாறு தீ விபத்துக்கு உள்ளானது. எனினும், அயலவர்கள் மேற்கொண்ட துரித நடவடிக்கைகளை அடுத்து வீடு முற்றாக எரிவதில் இருந்து காப்பாற்றப்பட்டது.(எ-75)

### நாளை

தை 05
திங்கட்கிழமை
(19.01.2004)
திதி: துவாதசி
காலை 09.32 வரை.
நட்சத்திரம்: கேட்டை
பகல் 12.12 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம்: 12.35 - 2.05
ராகுகாலம்: 8.05-9.35
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

உரிமைகளின் உண்மையான மூலம் கடமைதான்.

யாழ். குடாநாட்டில்

# உயர் மின்அழுத்தக் கம்பிகளை பொருத்தும் பணிகள் ஆரம்பம்

வலி.தெற்கு,ஜன.18

குடாநாட்டில் மின்சார விநியோகம் இடம்பெறுகின்ற பிரதான வீதிகளில் உயர் மின் அழுத்த மின்சாரக் கம்பிகளைப் பொருத்தும் பணிகளில் இலங்கை மின்சார சபையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

முன்னர், போதியளவு மின்சாரக் கம்பிகள் கிடைக்காமையினாலும் மின்சார விநியோகத்தை விரைவுபடுத்துவதற்காகவும குறைந்தளவு மின் அழுத்தம் கொண்ட மின்சாரக் கம்பிகளைப் பொருத்தி மின்சார விநியோகம் வழங்கப்பட்டது.

தற்பொழுது, மின்சாரக் கம்பிகள் போதிய அளவு கிடைத்துள்ளதை அடுத்து சீரான மின்விநியோகத்தை ஏற்படுத்தும் நோக்கில் உயர் மின் அழுத்த மின்சாரக் கம்பிகள் பொருத்தப்பட்டு வருகின்றன.

இதன் மூலம், இனிவரும் காலங்களில் பாதுகாப்பான மற்றும சீரான மின் விநியோகம் குடாநாட்டில் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (எ-10-152)

# சமாதானக் கல்விச் சுற்றுலா; குருநாகல் மாணவர் யாழ்.வருகை

குருநாகல் 'ஜனசெத்த' - ஹரிதாஸ் அமைப்பின் அனுசரணையுடன அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 50 பாடசாலை மாணவர்கள் இரண்டு நாள சமாதான கல்விச்சுற்றுலாவை மேற்கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளனா.

யாழ். குடாநாட்டிலுள்ள வழிபாட்டு ஸ்தலங்கள், புராதன இடங்கள் மற்றும நிறுவனங்கள் என்பவற்றை அவர்கள் சென்று பார்வையிட்டனர். சமயப் பெரியார்களையும் அவர்கள் சந்தித்துக் கலந்துரையாடினர்.

மேற்படி மாணவர்கள், தாங்கள் சேமித்து வைத்திருந்த சிறு தொகைப பணத்துக்கு நூல்களை வாங்கினர். அவ்வாறு வாங்கப்பட்ட சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான நூலகள் யாழ். நூலகத்துக்கு அவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்டன.

மாணவர்கள், ஆயர் இல்லத்துக்குச சென்று யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையைச் சந்தித்தபோது அவர் மாணவர்களிடம் கூறியதாவது:-

சிறுவர்களாகிய நீங்கள் முன்னின்று நூல்களைத் திரட்டி அன்பளிப்புச் செய்திருக்கிறீர்கள். கல்வி ஒரு பெருஞ்செல்வம். அதனை வளர்ப்பதற்கு இந்த நூலகம் பெரும் பங்காற்றியது. எத்தனையோ கொடையாளிகளின் அன்பளிப்புக் காரணமாகத்தான இந்த நூலகம் உருவானது.

மாணவர்களாகிய நீங்கள் அர்ப்பணிப்புடன் செற்பட்டு சகோதர மாணவர்களுக்காக சிறுகச் சேகரித்த பணத்தில நூல்களை வாங்கி அன்பளிப்புச் செய்திருக்கிறீர்கள். இதன்மூலம் உங்களது அன்பையும், சமாதானத்தையும நீங்கள் வெளிப்படுத்தியுள்ளீர்கள்.

உங்கள் முயற்சி சமாதானத்தை வளர்ப்பதாக அமையட்டும். அந்தச் சமாதானம் என்றும் நிலையானதாக அமைய இறைவனிடம் ஆசிவேண்டி உங்கள் முயற்சியைப் பாராட்டுகின்றேன் - என்றார்.

மாணவர்கள்குழு 'உதயன்' அலுவலகத்திற்கும் வருகை தந்து பத்திரிகை அச்சிடுவதையும் பார்வையிட்டது.

மாணவர்களுக்கு வேண்டிய வழிகாட்டல் குறிப்புகளை யாழ். கியூடெக் நிறுவனத்தைச் சேர்ந்த யோசப் பாலா வழங்கினார். (எ-9)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மண்மகிழ 16.06.1942

கண் நெகிழ 23.12.2003

அமரர்

### வல்லிபுரம் நாகரட்ணம்

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச்செய்தி அறிந்து விரைந்து வந்து எமக்கு பல வழிகளிலும் உதவிசெய்த அனைவருக்கும் மற்றும் தொலைபேசி, கடித மூலம் அனுதாபம் தெரிவித்த அன்பு உள்ளங்களிற்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் கலைஞர்களுக்கும் நண்பர்களுக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப் பதுடன் நாளை (19-01-2004) திங்கட்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்வதோடு எமது அழைப்பு கிடைக்கப்பெறாதவர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்.

(27211)(36)

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள்.



ஏக விநியோகஸ்தர்:-
JEGHAN PHARMACY
NO.462/B, HOSPITAL ROAD, JAFFNA
TP: 021-2222194
தயாரித்து விநியோகிப்போர்:-
PHARMCO
MARKETING SERVICES (PVT) LTD.


...யாழ்ப்பாண மக்களுடன் ஆயுட்காலப் பங்காளித்துவம்

புதியதோர் ஆண்டில் பிரவேசிக்கும் இந்த வேளையிலே, நம்பிக்கையும் நல்லுறவும் மிக்க பங்காளித்துவ உறவின் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றுவோமென யாழ்ப்பாண மக்களுக்கு உறுதியளிக்கிறோம்.

7 வருடங்களுக்கு முன்னர், நாம் இந்த நாட்டின் தொலைத்தொடர்புத் துறையில் பிரவேசித்தபோது, எமது அதிநவீன தொழில்நுட்பத்தின் பயனாகப் புரட்சிகரமான முன்னேற்றத்தைக் கொண்டுவந்தோம். தொலைத்தொடர்புகளுக்குப் புதிய வரைவிலக்கணம் கொடுத்தோம். எமது தரச்சிறப்பான சேவைகளே மற்றையோரை மதிப்பிடுவதற்கான அளவுகோல்களாகக் கருதப்படுகின்றன. இதுவே சண்டெல்லின் சக்தியும் பெருமையும் ஆகும்.

வாருங்கள், எமது அர்ப்பணிப்பு மிக்க சேவையினால் பயனடையுங்கள். எங்களோடு இணைந்து முன்னேற்றப் பாதையில் புதிய பயணத்தை மேற்கொள்ளுங்கள்... ஆயுள் முழுவதும்.

Suntel
தொலைத்தொடர்பில் உங்கள் ஆயுட்காலப் பங்காளி
இல.31, பிள்ளையார் இன் கட்டடம், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 4590000-2 , பெக்ஸ்: 4590003

# சந்திரிகாவின் அதிரடி அரசியலின் பின்னணியில் இந்தியா உள்ளது!

## 'ரெலோ' முதல்வர் ஸ்ரீகாந்தா குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜன.18

ஜனாதிபதி சந்திரிகாவின் அதிரடி அரசியல் பின்னணியில் இந்தியாவே உள்ளது.

- இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் ரெலோ முதல்வர் என்.ஸ்ரீகாந்தா.

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம்.



கோபாலரத்தினம் எழுதிய 'பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு' என்ற நூல் வெளியீட்டு விழா கடந்த வியாழக்கிழமை யாழ்நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே ஸ்ரீகாந்தா இப்படிக்கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

தற்போது நிலவுகின்ற சமாதானச் சூழ்நிலை உடைந்துபோய் விடுமோ என்பதே இன்று மக்கள் மத்தியில் உள்ள மிகப் பெரிய கேள்வியாகும். தென்னிலங்கையில் எத்தகைய அரசியல்மாற்றங்கள் நிகழ்ந்தாலும் இலங்கையில் உடனடியாக யுத்தம் ஒன்று ஏற்பட வாய்ப்பு இல்லை. இன்று நிலவுகின்ற சர்வதேச நிலைவரம் மீண்டும் இங்கு யுத்தம் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை. அந்தவகையில் தமிழ மக்கள் ஆறுதலடையமுடியும்.

இதேவேளை -

உலக வல்லரசாகத் திகழும் அமெரிக்கா இலங்கையில் சமாதானம் ஏற்படுவதனை விரும்புகின்றது என அர்த்தம் கொண்டுவிட முடியாது.

பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு அமெரிக்கா உலக நாடுகள் மீது போர் தொடுத்துள்ளது. இந்த நிலையில், ஒரு நாட்டினுள்ளே பிராந்தியங்களிடையே நிலவுகின்ற பூசல்கள், யுத்தமாக வெடிப்பதை அமெரிக்கா விரும்பாது. இதனால்தான் அது இங்கு யுத்தம் ஏற்படுவதை விரும்பவில்லை.

தமிழ் மக்கள் அனைவரும் இன்று ஒரே கொடியின்கீழ் திரண்டிருக்கிறார்கள். புலிகளை ஏக பிரதிநிதிகளாக அவர்கள் ஏற்றுக்கொண்டுள்ளார்கள். முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு தமிழினம் ஒரு சிறந்த இராணுவ - அரசியல் தலைவரைப் பெற்றிருக்கின்றது.

இந்தநிலையில், தென்னிலங்கை அரசியல் சக்திகள் விரும்பினால் இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வைக் காண்பதற்கு தற்போதைய வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம். நிரந்தரமான - நிச்சயமான - நடைமுறைச் சாத்தியமான - தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்கமுடியும்.

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு மாறுபாடாக உள்ளது. ஜனாதிபதி சந்திரிகாவின் அதிரடி அரசியல் நடவடிக்கைகளின் பின்புலத்தில் இந்தியாவே இருக்கின்றது.

தமிழ் இனம் இப்போது தமது பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான எல்லைக்கு வந்துவிட்டது. இந்தப் பிரச்சினைகளுக்கு இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுக்குள் ஐக்கிய இலங்கைக்குள்ளான தீர்வு காணப்படும். அல்லது, ஐநா. சபையால் அங்கீகரிக்கப்பட்ட சுயநிர்ணயம் மற்றும் தமிழ்த் தேசியத்துடன் கூடிய தனித் தமிழ் ஈழமாக அந்தத் தீர்வு அமையும்.

இன்றைய சர்வதேச நிலைவரம் இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படுவதை அனுமதிக்காது. ஆனால், இதனைமீறி யுத்தவெறியர்கள் தமிழா வீட்டுக் கதவைத் தட்டுவார்களேயானால் அது த்னித்தமிழீழத்துக்கே இட்டுச்செல்லும்.

இன்றைய இளைய சமுதாயத்தை அரசியல் மயப்படுத்தவேண்டிய தேவை எழுந்துள்ளது. கடந்தகால வரலாற்றைத் தெரியாத - எதிர்காலத்தைப் பற்றிக் கவலைப்படாத - சந்ததியாக தற்கால இளைஞர் சமுதாயம் உள்ளது. இது மிகவும் மோசமான நிலைமையாகும். இந்தநிலை மாற்றப்பட வேண்டியது அவசியமாகும் - என்றார் ஸ்ரீகாந்தா.

யாழ்பல்கலைக்கழக தமிழ்த்துறைப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

பத்திரிகைத்துறை என்பது ஒரு சாதாரண துறையென்று நாம் எடைபோட்டுவிடக்கூடாது. அது தார்மீகமும தர்மமும் பரவிக் காணப்படும் துறை. ஒரு மனிதன் ஒரு துறையில் 50 ஆண்டுகளாக நிலைத்து நிற்பதென்பது சாதாரண விடயமல்ல. அந்தவகையில், பத்திரிகையாளர் கோபு தன்னுடைய பத்திரிகைப் பணியில் 50 ஆண்டுகள் நிலைத்து நிற்கின்றார் என்றால் பாராட்டக்கூடிய விடயம. அவர் பத்திரிகைத்துறையில் மேன்மேலும் வளர வாழ்த்துகின்றேன் - என்று வாழ்த்தினார் பேராசிரியர்.

மூதறிஞர் க.சொக்கலிங்கம் (சொககன்) உரையாற்றுகையில் கூறியதாவது:-

'ஒரு பத்திரிகையாளன் திரைமறைவில் இருந்துகொண்டு சமூகத்துக்கும் நாட்டுக்கும் தேவையான நல்ல விடயங்களைக் கொடுக்கின்றான். அதே வேளை, பத்திரிகையாளன் எத்தனையே இடர்களை சவாலாக ஏற்றுக்கொண்டு தன்னுடைய அர்ப்பணிப்பு என்ற நோக்கத்தினூடாக வெளிவருகிறான் என்பதை கோபுவினுடைய நூல தெட்டத்தெளிவாக விளக்குகின்றது. ஒரு பத்திரிகையாளன் எவ்வளவு விதமான இன்னல்களை சந்திக்கிறான் என்பதையும் இந்நூல் உணர்த்துவதைப பார்க்கிறேன் - என்றார் சொக்கன்.

நிகழ்வில் ஆசியுரையை மூத்த எழுத்தாளர் தி.ச.வரதராஜனும் (வரதர்), வாழ்த்துரைகளை பேராசிரியர் அ.சண்முகதாஸ், மூதறிஞர் க.சொக்கலிங்கம் (சொக்கன்); பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், புலவர் மயில்வதிநாதசிவம், ஆகியோரும் வெளியீட்டுரையை 'உதயன' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதனும் ஆய்வுரையை கலாநிதி க.குணராசாவும் ஏற்புரையை நூலாசிரியர் எஸ்.எம்.கோபாலரத்தினமும் (கோபு) நிகழ்த்தினர். (ஒ-சி)

# தீவக மக்களின் அவசியத் தேவை சீரான கடல் போக்குவரத்தே!

நெடுந்தீவு குடாநாட்டுப் பெருநிலப் பரப்பிலிருந்து ஏறத்தாழ 5 கடல் மைல தொலைவில் அமைந்துள்ளது. அதன் சகல தேவைகளும் கடல்வழிப் போக்குவரத்தினூடாகவே இடம்பெறுகின்றன. கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் யாவும் தீர்மானிக் கப்படுவதில் இக்கடல்வழிப் போக்குவரத்தே முக்கியத்துவம்வகிக்கின்றது.

கடந்தசில ஆண்டுகளாகவே நெடுந்




தவுக்கான கடல்வழிப் போக்குவரத்து சீரற்றும் பாதுகாப்பற்றும் இருந்து வருகின்றது. இதனால், இத்தீவில் அத்தியாவசிய நடவடிக்கைகள் மிகவும் பின்னடைவான நிலைக்குச் சென்றுள்ளன.

### குமுதினி

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடத்தப்படும் நெடுந்தீவு கடல்வழிப் போக்குவரத்துச் சேவையில் கால் நூற்றாண்டு காலப் பழைமைவாய்ந்த 'குமுதினி' பயணிகள் இயந்திரப் படகே தற்போதும் சேவையில் ஈடுபடவேண்டிய நிலையில் உள்ளது. இப்படகு அதன பழைமை காரணமாகவும் பராமரிப்பின்மை காரணமாகவும் அடிக்கடி சேவையில் ஈடுபடமுடியாத நிலையை அடைந்து மாதக் கணக்கான இடைவெளிகளில் ஓய்வெடுத்துக் கொள்கிறது. இவ்வாறான வேளைகளில் தனியார் மற்றும் பல நோ.கூ.சங்க படகுகளில் மழையில் நனைந்தும், வெய்யிலில் காய்ந்தும் பொதிகளோடு, பொதிகளாகப் பாதுகாப்பற்ற பயணத்தை இப்பகுதி மக்கள் மேற்கொள்கின்றனர். கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக வருடத்தின் பெரும்பாலான நாள்களில இந்நிலையே தொடருகிறது. தற்போதும் நீண்டகாலமாகக் குமுதினிப் படகுச் சேவை தடைப்பட்டுள்ளது.

இத்தீவகத்தின் அபிவிருத்தி என்பது பெருநிலப் பரப்புடனான போக்குவரத்துத் தொடர்பிலேயே முற்றாகத் தங்கியுள்ளது. இன்று கல்வி, வைத்தியம மற்றும் பொருளாதார முயற்சிகள் யாவும் நெடுந்தீவில் மிகவும் பின்னடைந்து காணப்படுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது கடற்போக்குவரத்துச் சீரின்மையேயாகும்.

### அக்கறையின்மை

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலம் முதலாக இந்தத் தீவகத்தில் கடல் போக்குவரத்தில் தீவிர கவனம் செலுதததப்பட்டு வந்துள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியதாகவுள்ளது. தீவக மக்கள் பிரதிநிதித்துவத்தின் பிரதான பணிகளில் ஒன்றாக நெடுந்தீவு கடற்போக்குவரத்து கவனிக்கப்பட்டு வந்தது. மேதகு அல்பிரட் தம்பிஐயா முதல் பண்டிதர் கா.பொ.இரத்தினம் வரை ஒவ்வொருவரும் காத்திரமான பங்களிப்பை இவ்விடயத்தில் செலுத்திவந்தனர். 'எலஹரா, ராஜேஸ்வரி, அலை அரசி, குமுதினி, வடதாரகை, மணிமேகலை' என பல பாதுகாப்புடைய பயணிகள் படகுகள் மூலம் சிறப்பான கடற்போக்குவரத்துக்கு அன்றைய மக்கள் பிரதிநிதிகள் வழிவகுத்துக்கொடுத்தமையை இன்றும் மக்கள் நன்றியுடன் நினைவுகூருகின்றனர்.

1980களின் நடுப்பகுதி முதல் ஏற்பட்ட மாவட்ட வாரியான மக்கள் பிரதிநிதித்துவ முறையானது, நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒரு குறிப்பிட்ட பிரதேச மக்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிலைமையை இல்லாதொழித்து விட்டமையாலோ, அல்லது "மக்களுக்குச் சேவையாற்றித்தான் வாக்குப்பெறமுடியும்" என்ற நிலை இன்று அற்றுப்போய் விட்டமையாலோ என்னவோ இக்கால நாடாளுமன்றப் பிரதிநிதிகள் இப்படகு போக்குவரத்தினைச் சீராக்கச் சிறிதும் முயற்சிக்கவில்லை.

### தவர
### நெடுந்தீவு

அண்மைக்காலமாக தீவக மக்கள நலனிலும் முன்னேற்றத்திலும் பெரும அக்கறை கொண்டவர்களாகத் தம்மை வெளிக்காட்டிக்கொள்ளப் போட்டி போட்டு நின்ற எமது மாவட்ட மக்கள் பிரதிநிதிகளில் யாராவது முன்வந்து சீரான கடற்போக்குவரத்துக்கு வழிசெய்வார்களா? என்பதே ஒவ்வொரு யாழ. மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரையும் நோக்கி இன்று தீவக மக்கள் விடுக்கும் கேள்வியாகும்.

இத்தீவக மக்களின் நாளாந்த தேவைகளை நிறைவுசெய்யும் வகையிலும் வாழ்க்கைத் தரத்தினையும் நலன்களையும் மேம்படுத்தவும் ஏற்றதாக நாளாந்தம் சீரான கடற்போக்குவரத்துக்கு உரியவாறு வழிசெய்யும் வகையில் புதிய பயணிகள் இயந்திரப் படகினைப் பெற்று சேவையிலீடுபடுத்த சம்பந்தப்பட்டவர்கள் தாமதமின்றி நடவடிக்கை மேற்கொள்ள முன்வருதல் வேண்டும் என்பதே எமது வேண்டுதலும் எதிர்பார்ப்புமாகும்.

# வாசகர் திருமுகம்

## வைரவர் கோயில் அறங்காவலரின் பெருமனது...

கடந்த மாதம் 25 ஆம் திகதி நல்லூர் சட்டநாதர் வீதியால் வழமைபோல வந்துகொண்டிருந்தேன். கொண்டலடி வைரவர் கோயில் வீதியில் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மேடையில் ஒரு இளைஞனும் யுவதியும் தமிழ்ச் சினிமாக்களில் சிம்ரனும் விஜேயும் ஆடுவது போன்று ஆடிக்கொண்டிருந்தனர். என்ன நிகழ்வென்று விசாரித்ததில் ஒளிவிழா என்று தெரியவந்தது. நான் சைக்கிளைத் திருப்பி கோயில் வாசலில் நிறுத்திவிட்டு இரு கைகளையும் சிரமேற் குவித்தவாறு "வைரவருக்கு அரோகரா" என்றேன். ஒளிவிழாவை ரசித்துக்கொண்டிருந்தவர்கள் "வைரவருக்கு அரோகராவாம்" எனக் கூறி நகைத்தனர்.

நடுத்தர வயதுடைய ஒருவர் வந்து மீசையைத் தடவியவாறு வில்லன் பாணியில் ஒரு பார்வையை வீசிவிட்டுச் சென்றார். என்ன பார்க்கிறீர்கள் என்று நான் அவரிடம் கேட்டேன். நீ போ என்றார் அவர். நானும் மீசையைத் தடவியவாறு "நீசொல்லி நான் போகத்தேவையில்லை; எனக்குப் போகத் தெரியும" என்று சொல்லிவிட்டு நானசைக்கிளை எடுத்துக்கொண்டு வீதியால சென்றேன். அவ்வேளையில் கோயில் மேற்கு வீதியால் வந்த இரு இளைஞர்கள், எனது சைக்கிளுக்குக் குறுக்கே தங்கள் சைக்கிளைப் போட்டு என்னை நிறுத்தினர், அச்சமயம் முதலில்வந்து என்னைப் போகச்சொன்னவர் அவர்களை இழுத்துச்சென்றுவிட்டார்.

இந்துமதம் எம்மதமும் சம்மதம் என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டது. "நீ எந்த வடிவத்தில் என்னைக் கூப்பிடுகிறாயோ அந்த வடிவத்தில நான் உனக்குக் காட்சி தருகிறேன்" - என்கிறான் கண்ணன் கீதையில்.

சைவமதம் அன்பு மதம். யாழ்ப்பாணக் கலாசாரம் கந்தபுராணக் கலாசாரம். நதிகள் பலவானாலும் பல்வேறு வழிகளில் சென்றாலும் இறுதியில் சங்கமிப்பது கடலில்தான் என்கிறது சங்கரர் வேதாந்தம்.

சவூதி அரேபியாவில் அனுமானுக்குக் கோயில் கட்டி (சிறு ஆலயம்) வழிபட்ட ஆறு மலையாளிகள் கொல்லப்பட்டனர்.

இந்தவகையில், இந்து மதம் அனைத்து மதங்களையும் அரவணைத்துச்செல்லும் பரந்த மனப்பான்மையுடைய மதம் என்பதை நிரூபிப்பதற்கு கிறிஸ்தவ மதப் பிரசாரங்களுக்கு இடமளித்த கொண்டலடி வைரவர் கோயில அறங்காவலருக்கும் கொண்டலடி வைரவர் கோயிலடியில் வாழும் இந்துக்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன். சமயங்கள் மக்களைப் பிளவுபடுத்துவதற்கும் சண்டையிடுவதற்கும் தோற்றுவிக்கப்பட்டவையல்ல. ஒருவர்மீது மற்றவர் அன்பு செலுத்தவும், ஒற்றுமையாகவும் சகோதரத்துவத்துடனும் வாழ்வதற்கே அவை வழிகாட்டுகின்றன.

நல்லூர். ந.பரமேஸ்வரன்.

## சைவசமயத் தொண்டும் ஒலிபெருக்கியும்

சமயத்தின் பெயரால் இன்று நாட்டில் அநேக விரும்பத்தகாத செயல்கள் நாள்தோறும் நடந்து வருகின்றன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இருப்பது இன்று சைவக் கோயில்களில் அதிக ஒலியுடன் காதுகள் செவிடும் பலரும் படியாகப் போடப்படும் ஒலிபெருக்கியினால் ஏற்படும் தொந் தரவு ஆகும். இதைப் பலரும் பல தடவைகள் பத்திரிகைகள் வாயிலாகக் கூறியிருந்தும் சம்பந்தப்பட்டோர் இதில் கவனம் செலுத்துவதாக இல்லை.

குறிப்பாக, மக்களுக்கு ஒலிபெருக்கியினால் அதிக சிரமம் ஏற்பட்டுக் கொண்டு இருக்கும் பகுதியாக இருப்பது யாழ்.நகரப் பகுதியும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களும் என்பதைக் கூறத்தேவையில்லை. இது மக்கள் அதிக நெருக்கமாக வாழும் பகுதியாக இன்று காணப்படுவதனாலும் குடியிருப்புக்களுக்கு மத்தியில் கோயில்கள் அமைந்துள்ளதாலும் அதிக ஒலியுடன் போடப்படும் ஒலிபெருக்கியினால் அதிகம் பாதிக்கப்படும் மக்கள் இப்பகுதி மக்களேதான. இதனால், மாணவர்கள் தங்கள் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது இருக்கின்றனர். வயோதிபர், நோயாளிகள், சிறுகுழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோர் மிகவும் பாதிக்கப்படுகின்றனர். கோயில்களில் நடைபெறும் நிகழ்வோ சொற்பநேரம், இதைக் காரணம் காட்டி நடைபெறும் ஒலிபெருக்கியின் பாவனையே நீண்டநேரம். இதனால், மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளை யாரிடம் கூறி அழுவது? எந்தச் சுவரில் போய் முட்டுவது?

நாம் சமயத் தொண்டு செய்கின்றோம்; பக்தியை வளர்க்கின்றோம் என்று நினைத்து சமயத்தையம் சிறுமைப்படுத்தி, மக்களுக்கும் கோயில்கள் மீதும், சமயத்தின் மீதும் வெறுப்பை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கின்றோமே தவிர, வேறு எந்த நற்செயல்களையும் மக்களுக்காகச் செய்வதில்லை. எனவே, சம்பந்தப்பட்டோர் இனிமேலாவது இவற்றைக் கவனத்தில் எடுத்துச் செயற்படுவது மிகவும் அவசியமாகும். செயற்படுவார்களா?

வண்ணார்பண்ணை. சி.கருணாகரன்.

## தந்தித் தூதுவர் கடமையை மீண்டும் ஏற்படுத்தவேண்டும்

சென்ற 1990 ஆம் ஆண்டில் யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட தொலைபேசி துண்டிப்பால் யாழ்ப்பாணத்தில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் தந்திகளையும், கடுகதித் தபால்களையும் விநியோகிக்கும் தந்தித் தூதுவர் (Telegram Messenger) கடமைமுறை இடைநிறுத்தப்பட்டது.

தொலைபேசிச் சேவை இல்லாதிருந்தபோதும் அஞ்சல் மூலம் கிடைக்கப்படும் கடுகதித் தபால்களையும் அஞ்சலர்களே (Postmen) விநியோகம் செய்கிறார்கள. இதனால், வீணான காலதாமதம் ஏற்படுவதோடு, பொதுமக்களின் அதிருப்திக்கு அஞ்சல் அலுவலகங்கள் ஆளாகியுள்ளன.

தறபோது தொலைபேசிகள் அநேகமான அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுளளன. அத்துடன், விமானம்மூலம் குடாநாட்டிற்கு கடுகதித் தபால்கள் எடுத்துவரப்படுகின்றபோதிலும் தந்தித் தூதுவர் (Telegram Massenger) கடமைமுறை மீள அறிமுகப்படுத்தப்படவில்லை. இதனால், அஞ்சல் ஊழியர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். அதேவேளை, பொதுமக்களும் அவசர செய்திகளை அனுப்பும் வாய்ப்பினை இழந்துள்ளனர்.

காங்கேசன் சிமெந்து ஆலை, லங்கா சிமெந்து நிறுவனம், உப்புக்கூட்டுத்தாபனம், தொல்பொருள் ஆராய்ச்சி நிலையம், காலநிலை அவதானிப்பு நிலையம போன்ற நிறுவனங்களின் பணிகள் முற்றாகச் செயலிழந்த காலங்களில்கூட மேற்படி நிறுவன ஊழியர்களின் வேதனங்கள் வழங்கப்பட்டே வந்தது.

ஆயினும், சீராக இயங்கும் அஞ்சல் திணைக்களப் பணிகளின் ஒரு பகுதி கடமைமுறை இடைநிறுத்தப்பட்டதால் பொதுமக்களும், ஊழியர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகினர்.

இது சம்பந்தமாக பத்திரிகைகள் வாயிலாக பொதுமக்கள் பலரிடமிருந்தும் குறைகள் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் மேற்படி குறைகளை நிவர்த்திசெய்ய எதுவித நடவடிக்கைகளும் எடுப்பதாகத் தெரியவில்லை. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது சம்பந்தமாக தங்களாலான நடவடிக்கையை எடுத்து குடாநாட்டில் இப்பணி திறம்பட நடைபெறுவதற்கு ஆவன செய்வீர்கள் என்ற நம்பிக்கையுடன் இக்கடிதத்தைச் சமர்ப்பிக்கின்றோம்.

குடாநாட்டு மக்கள் சார்பாக
கொடிகாமம். கா.தணிகை.

## முன்னாள் முதல்வர் நினைவாக கற்றல் உபகரணம்

வலி.தெற்கு,ஜன.18

யாழ்.மாநகரசபையின் முன்னாள் முதல்வர் எஸ்.எஸ். நவரட்ணத்தின் ஞாபகார்த்தமாக அன்னாரது குடும்பத்தவர்களால் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழா நிகழ்வின்போது முதலாம் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. (எ-152)

## தியாகராச சுவாமிகள் இசை ஆராதனை

வலி.தெற்கு,ஜன.18

கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் நாளை திங்கட்கிழமை காலை தியாகராச சுவாமிகள் இசை ஆராதனைகள் இடம் பெறவுள்ளன.

இசை ஆசிரியர் சிவஸ்ரீ ம.தாணுநாதக் குருக்களின் ஏற்பாட்டில் பாடசாலை அதிபர் க. செல்வக்குமாரன் தலைமையில் இந்த ஆராதனை நிகழ்வுகள் இடம்பெறும்.

தியாகராச சுவாமிகள் வழிபாடு, ஆராதனைகள் நடைபெறுவதோடு செல்வி இராம.யதுநந்தினியின் அவர்களின் விசேட ஆராதனை நிகழ்வும் தொடர்ந்து இடம்பெறும்.

இந்நிகழ்வில் சங்கீதபூஷணம் எஸ்.இராமநாதன், வலிகாமம் கல்வி வலய இசைத்துறை ஆசிரிய ஆலோசகர் திருமதி வி.நாகேஸ்வரன், ஸ்கந்தவரோதயக் கல்லூரி இசை ஆசிரியர் எஸ்.சிவஞானராசா ஆகியோர் விசேடமாக கலந்துகொண்டு ஆராதனைகளில் ஈடுபடுவார்கள். (எ-152)

## கல்வி அலுவலகத்துக்கு நிரந்தரக் கட்டடம்

வலி.தெற்கு,ஜன.18

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் இயங்கிவரும் வலிகாமம் கல்வி வலயத்துக்கு நிரந்தரக கட்டடம் ஒன்று நிறுவப்படவுள்ளது என வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெ.இருதயநாதன் தெரிவித்தார்.

இராமநாதன் கல்லூரி வளாகத்தின் ஒரு பகுதியில் இந்த அலுவலகம் தற்போது தற்காலிகமாக இயங்கி வருவது தெரிந்ததே.

வலயக் கல்வி அலுவலகத்துக்கான நிரந்தரக் கட்டடம் மருதனார் மடத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைப்பீடத்துக்கு அருகில் நிறுவப்படவுள்ளது என்றும் கூறப்பட்டது. (எ-152)

## பரீட்சைத் திணைக்கள செயலமர்வு

அச்சுவேலி,ஜன.18

ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் பாடசாலை மட்டக்கணிப்பீட்டு வேலைத்திட்டம் தொடர்பாக இலங்கை பரீட்சைத் திணைக்கள மதிப்பீட்டுப் பிரிவினால் நடத்தப்படும் சேவைக்கால செயலமர்வு நாளை திங்கட்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளுக்குப் பொறுப்பான பகுதித்தலைவர்கள் இந்தச் செயலமர்வில் தவறாது கலந்து கொள்ளவேண்டும் என பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார். (எ-11)

## 192 பேருக்கு சுழற்சி முறையில் கடன்

வலி.கிழக்கு,ஜன.18

வலி.கிழக்கு அச்சுவேலி பல நோ. கூட்டுறவு சங்கத்தினால் கடந்த ஆண்டு மட்டும் 192 பயனாளிகளுக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் உதவியுடன் சுழற்சி முறைக்கடன் வழங்கப்பட்டுள்ளதாக சங்கப் பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

கால்நடை, விவசாயம், சிறுகைத்தொழில் ஆகியவற்றை மேம்படுத்தும நோக்கத்துடன் இந்தக் கடன் வழங்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-180)

## தாதியர் பற்றாக்குறை

வலி.கிழக்கு,ஜன.18

அச்சுவேலி சுற்றயல்கூறு வைத்தியசாலையில் தாதியர் பற்றாக்குறை நிலவுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி ஆஸ்பத்திரியில் 6 தாதியர்கள் கடமையாற்ற வேண்டிய போதிலும் தற்போது 4 பேர் மட்டுமே கடமையாற்றுகின்றனர் என்றும் - கூறப்பட்டது. (எ-180)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1926 ~ 11 ~ 22



மறைவு 1997 ~ 01 ~ 06

**அமரர் பொன்னம்பலம் சண்முகலிங்கம்**

(கார் சாரதி)

18-01-2004

எமது வாழ்விற்கும் வளர்ச்சிக்கும்
அன்புத் தீபமாய் இருந்து
எம்மையெல்லாம் நல்ல நிலைமைக்கு
உருவாக்கிய எங்கள் தந்தையே!
ஏழாண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவை மறவாத

மனைவி (மனோன்மணி)
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

க.ஆனந்தகேதீஸ்வரன் (சிவகிரி)
முத்துமாரி அம்மன் வீதி.
திருநெல்வேலி தெற்கு. யாழ்ப்பாணம்

(27214)(35-21-14-18)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 1941 ~ 09 ~ 19



ஆண்டவன் அடியில் 2003 ~ 12 ~ 19

**அமரர் பொன்னையா மகேசன்**

(முன்னாள் ஊழியர், அண்ணா கோப்பி, இணுவில்)

எம் அன்புத் தந்தையின் மறைவுச்செய்தி கேட்டு எமது துயரத்தில் கலந்துகொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு, எமது இல்லத்தில் இன்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரர், சகோதரிகள்,
மைத்துனர், மைத்துனிகள்,
பெறாமக்கள், மருமக்கள்.

'றஜனி இல்லம்'
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(27194)
(35-21-18-14)

# வன்னி தொழில் நுட்பவியல் நிறுவகம்
# VANNI INSTITUTE OF TECHNOLOGY

அமெரிக்கா சிலிக்கன் வலியில் தலைமைச் செயலகத்தைக் கொண்ட அரசசார்பற்ற சர்வதேச நிறுவகமான International Tamil Technical Professionals' Organization - ITTPO வடகிழக்கில் வாழும் மக்களுக்காக Vanni Tech என்ற பெயரில் உயர்தொழில்நுட்ப நிறுவகத்தை கடந்த ஆண்டு கிளிநொச்சியில் நிர்மாணித்து அதன் முதலாவது தொகுதி மாணவர்களுக்கு தற்போது உயர்தொழில்நுட்ப வகுப்புகளை நடத்தி வருகிறது. இந் நிறுவகம் இரண்டாவது தொகுதி மாணவர்களை இவ்வருடம் உள்வாங்கவுள்ளது.

**பின்வரும் 01 வருடக் கற்கைநெறிகள் (STUDY PROGRAMS) இங்கு வழங்கப்படவுள்ளன.**

1. **Database Application Development**
2. **Web Based Application Developement**
3. **Computer Networking and Communications**
4. **Electronics**

தூர இடத்தில் இருந்துவரும் மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளைக் கொண்ட வளாகமாக இது உள்ளது. போதனைகள் யாவும் ஆங்கிலத்தில் நடத்தப்படும். தெரிவுசெய்யப்படும் மாணவர்களுக்கு நிறுவகம் தொழில்வாய்ப்பை ஒழுங்குபடுத்துமேயானால் அவர்கள் அதனை ஏற்று 02 வருடங்கள் வட - கிழக்கில் வேலை செய்யும் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தகைமைகள்:

1. அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழக பட்டதாரி அல்லது
2. க.பொ.த.(உ/த) இல் மூன்று பாடங்களில் சித்தியும், க.பொ.த.(சா/த) இல் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் சிறப்புச் சித்திகளும் கொண்டிருத்தல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் மாணவர்கள் நுழைவுப் பரீட்சையிலும், நேர்முகப் பரீட்சையிலும் தோற்றவேண்டும். இக்கற்கைநெறியைப் பூர்த்தி செய்வதற்கான (01வருடம்) கட்டணமாக ரூபா 10,000 அறவிடப்படும் (பகுதிக்கட்டணமாகவும் செலுத்தலாம்). சில தகுதிபெறும் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களும், கடனுதவிகளும் வழங்கப்படும். இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து பெப்ரவரி 15 ஆம் திகதிக்கு முன்பாகக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

www.vanni.org
www.ittpo.org
info@vanni.org

முகவரி:

***Registrar,***
***Office of Admission,***
***Vanni Institute of Technology,***
***Kilinochchi.***

Vanni Tech
Vanni Institute of Technology

*ITTPO is a registered non - profit organization in the USA and a government approved NGO in Sri Lanka.*

## VanniTech Student Admission Application Form - 2004

1. Name : ..................................... 2. Father's/Husband's Name: ..................................... 3. Mailing Address: .........................
4. Permanent Address: .................... 5. Date of Birth: ..................................... 6. Gender: .........................
7. Prefered Study Program: ............ 8. Academic Qualifications:

*Provide photo-copies of all certificates and related documents . For University study, list subjects (including Lab work), grades and honors for each year.*

| Examinations/Programs | Name of Institution | Degree/Certification | Start/End Dates | Subjects | Grades |
|---|---|---|---|---|---|
| University *(Program of study)* | | | | | |
| All other Programs *(List individually)* | | | | | |
| *G.C.E. A/L* | | | | | |
| *G.C.E.O/L* | | | | | |

9. Work Experience *(List all experiences related to Business, Industrial, and Teaching)*

| Position at Employment | Responsibilities & Accomplishments | Name of Institution | Start/End dates |
|---|---|---|---|
| | | | |
| | | | |

10. Other Skills

*(Describe in detail all activities relating to Management, Leadership, Public-Service, School-Prefect, Team Captain, other Technical expertise etc.)*

11. *To the best of my knowledge all information provided above are truthful, and any misrepresentation of information or furnishing of false documents will disqualify my opportunity to be selected as a student. If it is discovered during my studies that I have willfully provided incorrect information, I will be expelled from institute, and if discovered after my studies, my certification will be revoked.*

Signature: ......................................... Date: ...............................

(27068)(34-21-14-19)

பொது சன நூலகம்

# புலிகளைப் பலவீனப்படுத்தும் எதையும் இந்தியா செய்யாதிருக்க வேண்டும்

**குடாநாட்டில் அண்மையில் ஸ்தாபிக்கப்பட்ட 'மனித உரிமைகளுக்கும அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையம்' என்ற அமைப்பு இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு அனுப்பிய மகஜர் இங்கு முழுமையாகப் பிரசுர மாகின்றது.**

**அமையத்தின் இணைப்பாளர் சீ.வி.கே. சிவஞானம் இந்த மகஜரை கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக வாஜ்பாய்க்கு அனுப்பியுள்ளார்.**

முக்கிய மதகுருமார், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களைக் கொண்ட இவ்வமையத்தின் செயற்குழு மேற்குறிப்பிட்ட விடயத்தை தற்போதைய சூழ்நிலைகளின் அடிப்படையில் அதன டிசெம்பர் மாதக் கூட்டத்தில் பரிசீலித்தது.

நீண்ட கலந்துரையாடலின் பின்பு இந்த மகஜரைத் தங்களுக்கு சமர்ப்பிக்கவேண்டும் எனத் தீர்மானிக்கப் பட்டது.

இந்த நாட்டின் தமிழ் பேசும் மககள் இனப்பாகுபாடு, அடக்கு முறை மற்றும் திட்டமிட்ட அரச குடியேற்றங்கள் மூலம் தமது தாயக பூமியான வடக்கு - கிழக்கின் குடிசனப் பரம்பல் மாற்றம் என்பனவற்றால் பாரிய துன்பங்களை அனுபவித்துவருவது பற்றி இந்திய மக்களும், அரசியல் துறையும், அரசும் அறிந்திருக்கிறது என்பதில் எமக்கு எதுவித சந்தேகமுமில்லை.

இவற்றிற்கெதிராக தமிழ்பேசும் மக்களது போராட்டம் சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்பே ஆரம்பிக்கப் பட்டது. காந்திய வழியை பின்பற்றிய அமரர் எஸ்ஜே.வி. செல்வநாயகம அவர்களால் திறமையாக வழிநடத்தப் பட்ட சமாதானமுறையிலான இந்தப் போராட்டங்கள் அரசுத்தரப்பு அவற்றை வன்முறை மூலம் நசுக்கியதால் தோல்வியடைந்தன.

இந்நிலையில்தான், தமிழ இளைஞர்கள் ஆயுதமேந்திய தீவிரவாதத் திற்குத் தள்ளப்பட்டனர். இந்த ஆயுதப் போராட்டம் கடந்த இருபது வருடங்களாகத் தொடர்ந்தது, தமிழீழ விடுதலை புலிகள் இயக்கமே தமிழபேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை விசுவாசமாகவும் அர்ப்பணிப்புடனும் முன்னெடுக்கும் ஒரேயொரு தனிச் சக்தியாக மிளிர்கிறது.

தமிழர்கள் மட்டுமன்றி இந்த நாட்டின் எல்லாமக்களுமே இந்த யுத்த சூழலால் பாரியளவு பாதிப்புக்குள்ளாகியுள்ளதால் அவர்கள் சமாதானம் தொடர்வதையே விரும்புகின்றனர் என்பதைக் கூறுவதே போதுமானது எனக் கருதப்படுகிறது. இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் கைசாத்திட்டபோது மக்கள் யாவரும் சமாதானம் உதயமாகும் என்பதில் நம்பிக்கை கொண்டார்கள்.

ஆனால், சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையேயான பேச்சுக்கள் தேக்க நிலை அடைந்திருப்பது மிகவும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது. 'இந்தியா உள்ளிட்ட சர்வதேச நாடுகளின் ஆசியுடன் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதில் முன்னின்று உழைத்த நோர்வே அனுசரணையாளர்கள், தெற்கத்திய அரசியல் சக்திகளிடையே தெளிவு ஏற்படும்வரை தாம் ஒதுங்கியிருக்கத் தீர்மானித்திருப்பது மேலும் ஏமாற்றமளிப்பதாக உள்ளது.

கடந்த இருபது ஆண்டுகள் நாம் அனுபவித்த துன்ப, துயரங்கள் மனிதத்துவத்தின் எல்லா நியமனங்களையும் எல்லை தாண்டியவையாகும். எமது அடிப்படை உரிமைகளை மறுப்பதே வழமையான நாளாந்த நடவடிக்கையாகவிருந்தது. எமது நாயகத்தின் முழுக் கடலோரப் பகுதிகளையும் இராணுவம் ஆக்கிரமித்து நின்றதால் எமது மக்கள் கடற்றொழிலுக்காகக் கடலுக்குச் செல்லும் உரிமை மறுக்கப்பட்டது. இதனால் எமது சனத் தொகையில் முப்பது வீதமான கடற்றொழிலை நம்பிவாழும் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்க நேர்ந்தது.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பின்னரே எமது மக்கள் கடலுக்குச் செல்லப் படிப்படியாக அதுவும் பல கட்டுப்பாடுகளுடன் ஆயுதப்படையினரால் அனுமதிக்கப்படுகின்றனர். இங்குதான் கவலைக்குரிய திருப்பங்கள் நிகழ்கின்றன.

தமிழ்நாட்டு மீனவர்கள் எமது கடற்பிரதேசங்களில் அத்துமீறி மீன் பிடிக்கும் பிரச்சினையை எதிர்கொள்ள வேண்டிய துரதிர்ஷ்ட சூழ்நிலை எமது மீனவர்களுக்கு ஏற்படுகிறது. விரக்தி காரணமாக எமது மீனவர்கள தமிழ் நாட்டு மீனவர்களின் படகுகளையும் மீனவர்களையும் தடுத்துவைக்கும சூழ்நிலை ஏற்படுகிறது.

இது மிகவும் கவலைக்குரியது என நாம் வலியுறுத்த விரும்புகிறோம். ஏனெனில், இதனால் வடக்கு கிழக்கு தமிழ்பேசும் மக்களுக்கும் தமிழக மீனவர்கள் மற்றும் இந்திய மக்கள், இந்திய அரசு என்பவைக்கிடையேயான உறவுகளில் பாரிய பாதிப்புக்களை இவை ஏற்படுத்துகின்றன.

பாதிக்கப்பட்ட மீனவர்களின் நடவடிக்கைகளை விடுதலைப் புலிகளின நடவடிக்கைகள் என அக்கறையுள்ள சிலசக்திகள் தப்பாகப் பிரசாரம் செய்வது மேலும் கவலையளிப்பதாகவுள்ளது.

*வடக்கு - கிழக்கு நிலப்பிரதேசத்தை அண்டிய கடல் மற்றும் கரையோர வளங்கள்மீது ISGA கட்டுப்பாட்டைக் கொண்டிருப்பதோடு இந்தவளங்களைப் பயன்படுத்துவது தொடர்பாகத் தேவைப்படும் கட்டுப்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான அதிகாரங்களைக் கொண்டிருக்கும்.*

இவ்வாறு கூறும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை முன்மொழிவுகளில் 18 ஆவது சரத்துக்கு தங்கள் அவதானத்தைக் கோரவிரும்புகிறோம.

எமது மக்கள் எமது பிரதேசத்தை அண்டிய கடலுக்குள் செல்வதற்குளள எமது உரிமைகள் மறுக்கப்பட்டதனாலேயே இந்த அதிகாரம் கோரப்பட்டது என்பது தெளிவாகும். ஆயினும், சில பக்கச்சார்பான சக்திகள் இந்த ஏற்பாட்டை தவறாக அர்த்தங்கொடுத்து இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை கோட்பாட்டிற்கே தவறான வியாக்கியானங்கொடுக்க முனைவது மனவருத்தத்திற்குரியது. அவர்கள் இந்தியச் சிந்தனையையும் தவறாக வழிநடத்த உள்நோக்கத்துடன் முயல்கின்றனர்.

தமிழக மீனர்வர்களை எமது கடற்பிரதேசத்துக்குள் அத்துமீற வேண்டாமென தமிழக அரசு அறிவுறுத்துவது இரு நாட்டினதும் தமிழ் மீனவர்களுக்கிடையே எழும் மோதல்களையும் தப்பபிப் பிராயங்களையும் தவிர்க்க உதவும்.

தமிழ் சமூகத்தின் உணர்வுகளை

## தமிழ் பேசும் மக்களின் அமையம் கோரிக்கை

யும் அபிலாஷைகளையும் நியாய பூர்வமான கோரிக்கைகளையும் முன்னெடுத்து அயராது போராடுபவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதை நாம் குறிப்பிடவேண்டும். இதனாலும் தமிழ்மக்களின் ஏகபிரதிநிதிகள் எனக்கருதப்பட்ட இவ்வமைப்பு 2001 டிசெமபர் நாடாளுமன்றத் தேர்தல்களில தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வெற்றிக்கு பின்பு அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளாகவும் உருவெடுத்துள்ளது.

பெரிய இந்தியதேசம் ஒடுக்கப்பட்ட சமூகமான எமது பக்கம் நிற்பதே நியாயதர்மத்தின் அடிப்படைக் கோட்பாடாகவிருக்கும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

விடுதலைப் புலிகளின் பலமான நிலைகாரணமாகத்தான் சிறிலங்கா அரசு அவர்களுடன் ஒப்பந்தம் செய்ய முன்வந்தது என்பது மறுதலிக்க முடியாத உண்மையாகும். அதேபோல, தமிழ் பேசும் மக்களும் அவர்களையே தமது தனிப்பலமாகக் கருதுகின்றனர்.

எமது கலாசார சமய, மொழி வழித தொடர்புகள் காரணமாக இந்தியாவை நாம் நேசித்து மதிக்கின்றோம் என்பதை நாங்கள் உறுதிடக் கூறிவைகக விரும்புகிறோம்.

எனவே, தமிழ் பேசும் மக்கள் மற்றும் விடுதலைப் புலிகள் தொடர்பான இந்திய கொள்கையை சாதகமான முறையில் மீளாய்வு செய்யவேண்டும என்றும் -

விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்தும் எதையும் செய்யாதிருக்க வேண்டும் என்றும் -

விடுதலைப் புலிகளுக்கு - அது தமிழ்மக்களுக்கானது - இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வழங்குவதற்கான சாதகமான பங்களிப்பை ஆற்ற வேண்டும் என்றும் -

விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையில் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்க சாத்தியமான சகலதையும் செய்யவேண்டும் என்றும் -

அர்த்தமுள்ள சமஷ்டி அமைப்பு முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு சாத்தியமான எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும் என்றும் - தங்களையும் இந்திய அரசையும் வேண்டிநிற்கிறோம் என்று அதில் உள்ளது. (ஐ)

### போராளி சாவு!

கிளிநொச்சி,ஜன.18

விடுதலைப் புலிகளின் போராளி ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்று முன்தினம் சாவடைந்தார்.

வீரவேங்கை சாரங்கன் (ராஜேந்திரன் ரமேஸ்கரன் - 156 ஆம் கட்டை, ஆனந்தபுரம், யாழ்சாலை, கிளிநொச்சி) என்ற போராளியே இவ்வாறு சாவடைந்தவராவார். (ம-4)

# நீதியான, நிலையான சமாதானத்துக்கு அரசியல் தலைவர்கள் உதவவேண்டும்!

## ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கோரிக்கை

கொழும்பு,ஜன.18

நீதியானதும் நிலையானதுமான சமாதானத்தை நாட்டில் ஏற்படுத்த சகல அரசியல் தலைவர்களும் முயற்சி



செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். அனைத்து அரசியல் சக்திகளையும் ஏனைய குழுக்களையும் உள்ளடக்கிய சமாதான முயற்சியே தொடர்ந்தும் நிலைத்திருக்கக் கூடியது என்பது எனது நம்பிக்கையாகும்.

- ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு விடுத்திருக்கும் வாழ்த்துச் செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

செய்தியில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

பொங்கல் திருநாளைக் குதூகலமாகக் கொண்டாடும் அனைவருக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வாழ்வைப் புதுப்பித்துக்கொள்ளும் நற்தருணமுமாகும் எவ்வாறாயினும், வடக்கு - கிழக்கில் யுத்தம் ஓய்ந்திருக்கின்றபோதிலும் தமிழ் மக்களின் உள்ளத்தில் நம்பிக்கையீனமும் சந்தேகங்களும் ஊசலாடுவதை நான் அறிவேன்.

நேருக்கு நேரான ஆயுதப் போராட்டம் ஓய்ந்துள்ளதுடன், அது கடந்த இருவருடங்களில் எமது கிராமங்களுக்கும் நகரங்களுக்கும் அமைதியைக் கொண்டு வந்திருக்கின்றது. அன்றாடம் நாம் செவிமடுக்கும் யுத்தங்கள், இழப்புக்கள் இன்று இல்லை. வடக்கிலும் தெற்கிலும் எமது உடன் பிறப்பு ஒருவரின் இழப்பு அல்லது காயம் குறித்த செய்தியின்றி நாம் இன்று நிம்மதிப் பெருமூச்சுவிட முடிகின்றது.

அரசியல் வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கு யுத்தம் இனிமேலும் ஒரு வழிமுறையாக இருக்கமாட்டாது என்பதை சம்பந்தப்பட்ட தரப்புக்கள் அறிந்து, அரசியல் ஸ்திரப்பாடின்மைக்கு மத்தியிலும் அமைதியைப் பேண அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றன. மக்கள வடக்கிலிருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு சுதந்திரமாக நடமாடக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மக்களுக்குத் தேவையான பொருள்களும் சேவைகளும் இலகுவாக அவர்களைச் சென்றடையக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டிருக்கின்றது.

யுத்த அழிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் சமாதானத்தின் மீது நம்பிக்கை வைத்து, தமது வீடுகளுக்கும் கடைகளுக்கும் விவசாய நிலங்களுக்கும் மீண்டும் சென்று, அவற்றை மீள் நிர்மாணம் செய்துகொண்டிருக்கிறார்கள். சமாதானத்தின்பால் உள்ள இந்த ஆழ்ந்த ஈடுபாட்டுக்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் சாதகமானதாகப் பதிலளித்து மக்களின் வாழ்வில் ஏற்பட்டுள்ள இம்மேம்பாட்டை மேலும் உறுதிப்படுத்தி, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் இன, மத, அரசியல், பல்லின சமத்துவத் தன்மைக்கு மேலும் அணிசேர்க்கவேண்டுமென நான் எதிர்பார்க்கின்றேன்.

வெறுமனே யுத்தமற்ற சூழ்நிலை மட்டும் சமாதானமாகாது என்பதை தமிழ்மக்கள் ஏனைய சமூகத்தவரை விட நன்கறிவர். நாம் நிரந்தர அரசியல் தீர்வொன்றைக்காணவும், நேர்மையான சமாதானத்தை அடையவும் ஆர்வத்துடன் உழைக்க வேண்டியுள்ளது. நாம் சுதந்திரம் பெற்றது முதல அல்லது கடந்த இரு தசாப்தங்களாக வெற்றிகொள்ள முடியாதிருக்கும் பாரிய அரசியல் சவால் இதுவாகும். மேலதிக தாமதங்கள் எதுவுமின்றி சமாதான முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்றவகையில் உழைக்க வேண்டியது முக்கியமானதாகும். இது தொடர்பாக நான் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன்.

சமாதான முயற்சிக்குப் பங்களிப்புசெய்து விடுதலைப் புலிகளுடனான யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பேணுவதற்கு ஏற்றவகையில் அனுசரணை வழங்கும்படி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு நான் பணிப்புரை விடுத்துள்ளேன். அத்துடன், பிரதமருடனும் அவரது ஆலோசகர்களுடனும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏற்ற வகையில் பொறுப்புக்களைப் பகிர்ந்துகொளவதற்கும், அதேவேளை வினைத்திறனமிக்க ஆட்சிமுறையை முன்னெடுப்பதற்கான விடயங்கள் சம்பந்தமாகவும் நாம் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றோம். விரிவான அடிப்படையில் அரசியல், புரிந்துணர்வொன்றை ஏற்படுத்துவதற்கும் நாம் முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். இனப்பிரச்சினைத் தீர்வுக்கும், சமூக நீதியை நிலைநிறுத்துவதற்கும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஆதரவு நல்கும்படியும் நான் வேண்டியுள்ளேன்.

அதேவேளை, யுத்தப் பாதிப்புக்கு உட்பட்ட பகுதிகளில் வாழும் மக்களின அவசரத் தேவைகளை நிறைவு செய்வதில் அரசியல் கட்சிகளுக்கு இடையே உள்ள அரசியல் வேறுபாடுகள் ஒரு முடிவுக்கு வரும்வரை காததிருக்க முடியாது. ஆகவே, வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்களினதும் ஏனைய சமூகங்களினதும் மனிதாபிமானத் தேவைகளை நிறைவுசெய்துகொள்வதற்குத் தேவையான எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்வதற்கு நான் தயங்க மாட்டேன்.

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது தமிழ் முதுமொழியாகும். வளமான வாழ்வுக்கு இது வழியமைக்கும் என்பதே இதன் தொனிப்பொருளாகும. அந்தவகையில், இத்தைப்பொங்கல் திருநாள் எமது நாட்டில் வாழும் அனைத்து மக்களும் சமாதானமாகவும் வளமாகவும் வாழ்வதற்கு வழியமைத்துத்தரும் என நான் எதிர்பார்க்கிறேன்.

- இவ்வாறு செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேவேளை, ஜனாதிபதி தமது பொங்கல் செய்தியை சுயாதீன தொலைக்காட்சி ஒன்றில் தமிழில் வாசித்ததைக் காணமுடிந்தது.

### யாழ்.அரசஅதிபர் கம்போடியாவுக்கு நேற்றுப் பயணம்

யாழ்ப்பாணம்,ஜன.18

யுத்தம் நடந்த நாடுகளில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்த பயிற்சிக்காக யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் நேற்றுக் கம்போடியாவுக்குப் பயணமானார்.

யுத்தத்தால் அழிந்து மீள் கட்டுமானம் செய்யப்பட்ட கம்போடியாவின் நிலைமைகளை யாழ்.அரச அதிபர் பார்வையிட்டு, அங்குள்ள அதிகாரிகளுடன் கலந்துரையாடுவார்.

அரச அதிபருடன் யாழ்.செயலக திட்டமிடல் அதிகாரி எஸ்.ஞானகரனும் சென்றுள்ளார்.

அரச அதிபர் ஒருவாரத்தில் நாடு திரும்புவார். திட்டமிடல் அதிகாரி ஞானகரன் மூன்றுவாரம் அங்கு தங்கியிருந்து கட்டுமானப் பணிகளைப் பார்வையிடுவார். (எ-3)

### சீமெந்துத் தொழிலாளர் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.18

காங்கேசன்துறை சீமெந்து பொதுத் தொழிலாளர் யூனியனின் விசேட பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கத்தின் செயலாளர் கேட்டுள்ளார். (ம-ரி)

## கண்ணீர் அஞ்சலி

அன்புத் தந்தையாரின் திடீர் மறைவால் துயருற்று நிற்கும் நண்பர்

**திலக் மற்றும் குடும்பத்தினருக்கு**

ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கிறோம்.
மீளாத்துயரினின்றும் விரைவில் மீண்டுவந்து சப்ரகமுவ மண்ணில்
தளர்வின்றிக் கல்வியைத் தொடர
எல்லாம் வல்ல இறைவன் என்றும் துணை நிற்பார்.

நண்பர்கள்
முகாமைத்துவபீடம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
(சி-32833)(31-11-16)

## சேவை

G.C.E. O/L ஆங்கிலத்துடன் சித்தி எய்திய பெண்பிள்ளைகளுக்கு இலவசமாக English Typing கற்பிக்கப்படும். அத்துடன் Pagemaker / Corel Draw / Photo Shop பயிற்சிபெற்றவர்கள் தேவை பயிற்சி அற்றவர்களுக்கு முழு நேரப்பயிற்சி அளித்து வேலை வாய்ப்பும் பெற்றுத்தரப்படும்.

ACCOMMODATION AVAILABLE FOR OUTSTATION STUDENTS.

LOTUS CPA
10, Rudra Mawatta,
T.P.: 2361336.
(சி-32835)(31)

## நல்லூர் பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல் - 2004

01. 02. 2004 ஆம் திகதி முதல் 31. 12. 2004 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| 1. கொக்குவில் உப அலுவலகம் 329, பலாலி வீதி - ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 78,500.00 |
| 2. கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக்கடை | 350.00 | 5,000.00 | 50,342.50 |

- கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித்திகதி : 22.01.2004 வியாழன் 12.00 மணிவரை
- கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி : 23.01.2004 வெள்ளி 10.00 மணிவரை
- கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி : 23.01.2004 வெள்ளி 2.00 மணிக்கு

மேலதிக விவரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேச சபை உப அலுவலகங்களிலும் பிரதேச சபை தலைமைச்செயலகத்திலும் காரியாலயநேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

நல்லூர் பிரதேசசபை, திருநெல்வேலி.
16.01.2004
(C/32816)(34-11-16-31)

இராசரத்தினம் இராசதுரை
செயலாளர், நல்லூர் பிரதேச சபை.

# ஆரோக்கியம் பேணும் கருத்தரங்கு

*"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"*

DXN

**ரிஷி காளான்** உப உணவுப்பொருள்!

**இயற்கையான ஆரோக்கியத்தைபெற ஒரே வழி உணவு முறை மாத்திரமே...**

உங்கள் உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை உள்ள சகல பிரச்சினைகளுக்கும் ஒரே தீர்வான கனோத்தரப்பி துறையில் நிபுணத்துவம் பெற்ற இந்திய டாக்டர்கள் இங்கு வருகை தருகிறார்கள்.
இலவச வைத்திய ஆலோசனைகளையும் கருத்தரங்குகளையும் கொழும்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நடத்தவுள்ளார்கள்.

*இக்கருத்தரங்குகளுக்கு தவறாது சமுகமளித்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*



விரிவுரையாளர்கள்:
கலாநிதி K.N. வாசுபால் M.A.,M.Phil
&
டாக்டர் திருமதி வாசுபால்
MBBS, FCGP, FCIP, FAGE, ECFMG (USA)

| திகதி | நேரம் | விடயம் | இடம் |
|---|---|---|---|
| 19. 01. 2004 (திங்கள்) | 2. 00 பி. ப. | தலைவர்களுக்கான விசேட பயிற்சி | U.C.மண்டபம், திருகோணமலை. |
| 19. 01. 2004 (திங்கள்) | 4. 30 பி. ப. | கனோத்தரப்பி - தமிழ் | U.C.மண்டபம், திருகோணமலை. |
| 20. 01. 2004 (செவ்வாய்) | 4. 30 பி. ப. | கனோத்தரப்பி - தமிழ் | நாவலர் கலாசார மண்டபம், யாழ்ப்பாணம். |
| 21. 01. 2004 (புதன்) | 10. 30 பி. ப. | தலைவர்களுக்கான விசேட பயிற்சி | நாவலர் கலாசார மண்டபம், யாழ்ப்பாணம். |

மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ள :~
**MAGNUM INVESTMENTS (PVT) LTD.**
No.15, Stamboul Place, Colombo 03, SriLanka.
Tel: 2575753, 4723396, Fax: 2370796, E-mail: info@magnumsl.com
(27273) (26)

DXN

DXN ரிஷி காளான் சாவகச்சேரி நகர் விற்பனை முகவராக, DXN நிறுவனத்தினரால் நாம் நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். DXN அங்கத்தவர்கள் அனைவரும் DXN உற்பத்திப் பொருள்கள் அனைத்தையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**A.T. குமார்,**
A.T.குமார் விற்பனையகம்,
கண்டி வீதி, சாவகச்சேரி.
(27274)(26-11-16-31)

## விக்கிரமரட்ண ரேட்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட், (கொழும்பு) ஸ்தாபனத்தாராகிய

நாங்கள் சீனாவிலிருந்து பின்வரும் பொருள்களை நேரடியாகவே இறக்குமதி செய்கின்றோம்:-

'Sun Flower' (சூரியகாந்தி) மார்க் வெற்றிடச்சுடு நீர் போத்தல்கள் (Vaccum Flasks)
'Kapok' (பஞ்சு) மார்க் சோறு சமைக்கும் சாதனங்கள் (Rice Cookers)
'Anchor' (நங்கூரம்) மார்க் அமுக்க விளக்குகள் (Pressure Lamps)
'Red Heart' (சிவப்பு இதயம்) மார்க் மின்சார உடை அழுத்திகள். (Electric Irons)
'Triangle' (முக்கோண) மார்க் காஸ் அடுப்புக்கள் (Gas Cookers)
'Tun Huang' (துன் குவாங்) மார்க் விளையாடும் கடதாசிகள் (Playing Cards)
'Tiger Head' (புலித்தலை) மார்க் கை மின்கல விளக்குகள் (Torches) பிளாஸ்ரிக் மற்றும் உலோகத்தினாலானவை.
'Swallow' (ஸ்வாலோ - பறவை) மார்க் வண்ண மின் குமிழ்கள - 5W (Colour Bulbs)

மொத்த வியாபாரிகளுக்கு மிகவும் நியாயமான விலையில்.....

**WICKRAMARATNE TRADES (PVT) LIMITED,**
Importers & Wholesalers of Electric Goods, Stationery & Paper Items.
231, DAM STREET, COLOMBO-12.
TELEPHONE : 2337725, 2337726, 2436097, 2435648
Hot Line : 5358159, Fax : 2432986
E - Mail : wickpvt@slt.lk.
(27270)(31-11-16)

## கண்ணீர் அஞ்சலி

யா/வேலணை ஆத்திசூடி வித்தியாலய அதிபர்
**திருமதி இந்திராணி சிவதாஸ்**
அவர்களின் பாசமிகு தாயார்

**திருமதி சிவனேசபிள்ளை இராசம்மா**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*வேலணை வடக்கு,*
*வேலணை~05*

திருமதி யோ.சபாநாதன் (ஆசிரியை)
குடும்பத்தினர்
(27290)(31-11-16)

## மரண அறிவித்தல்

**ராஜரட்ணம் சொலமன் இராசக்கிளி**
**(இளைப்பாறிய பொறுப்பாளர், மரத்திணைக்களம், யாழ்ப்பாணம்)**

இல. 52, மாட்டின் வீதியைச் சேர்ந்த C.T.தம்பித்துரை சொலமன் (பத்திரிகையாளர்) அவர்களின் மகன் ராஜரட்ணம் சொலமன் இராசக்கிளி நேற்று (17.01.2004) சனிக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற C.T.தம்பித்துரை சொலமன் -நாகரட்ணம் ஆகியோரின் அன்பு மகனும் றோஸ் (இளைப்பாறிய தாதி, அரசினர் வைத்தியசாலை யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புக் கணவரும் ராஜன் (ஜேர்மனி), ஆனந்தி (லண்டன்), நிசாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் ஜெனிபர், நெலுபர், லோஜினி, குளோடியா, அனுசன், சோபியா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற வோஷிங்ரன், சொலமன்ஸ், பேபி (இளைப்பாறிய உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை), சாவித்திரி சின்ன பேபி சாமுவேல் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சரஸ்வதி இராசையா, பாலரட்ணம் சொலமன்ஸ் (இளைப்பாறிய உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை), அரியமலர் தங்கம் (அமெரிக்கா), ஜெயமலர் குட்டான் (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரரும் ஹரல்ட் நிக்ஷன் (ஜேர்மனி), லோகநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*R.Solomons,*
*1c Middlesex House,*
*Northwick Road,*
*Al perton Hao 14 f*
*Middlesex, England.*

தகவல்:
இ.சவுந்தரநாயகம் (தம்பி)
12/2, சந்தனமாதா ஒழுங்கை,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(27294)(31-11-16)

# 25ஆவது வருடத்தை இன்று பூர்த்தி செய்து வெள்ளி விழா காணும்

வாழ்த்துபவர்கள்:
யாழ். குடாநாட்டின் ஒரு சிறப்பு அங்காடி
அன்னைநாகா புட்சிற்றி
கே.கே.எஸ்.வீதி. யாழ்ப்பாணம்.

**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தை வாழ்த்துகின்றோம்.**

ஆறு வகையான வாசனை கொண்ட
GIV சோப். LASER பிளேற்
ஏகவிநியோகஸ்தர்:- க.கனகசபாபதி (பப்பு)
சங்கத்தானை. சாவகச்சேரி.

(சி-32842)(31-16-11)

# கண்ணீர் அஞ்சலி



எமது **நண்பன் றோய் மதிவதனன் (ஜேர்மனி)** அவர்களின்
**அன்புப் பேரன் (அம்மப்பா)**
**செல்லப்பா துரைராசா** அவர்களின்
மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில்நாமும் பங்கெடுப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

*யாழ்ப்பாணம்* - நண்பர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## செல்லப்பா துரைராசா

இணுவிலைப் பிறப்பிடமாகவும் நெட்டிலிப்பாய், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா துரைராசா (இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் - றொமேரி எஸ்டேட் பதுளை) அவர்கள் (14.01.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஞானாபரணத்தின் அன்புக் கணவரும் சிவசக்தி, சிவரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகிர்தா (கனடா), ஞானசம்பந்தர் ஆகியோரின் மாமனாரும் விதுரன் (மகாஜனாக் கல்லூரி மாணவன்), வானதி, பீஷ்மன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.01.2004) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நெட்டிலிப்பாய்,*
*கோண்டாவில் மேற்கு.*
(சி-32845)(31-11-17)
தகவல்:
து.ஞானாபரணம் (மனைவி).

## திருமதி பத்மநாதன் வாசுகி

புன்னாலைக் கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் நிரந்தர வதிவிடமாகவும் கொண்டவரும் உரும்பிராய் கிழக்கில் வசித்து வந்தவருமான திருமதி பத்மநாதன் வாசுகி நேற்று (17.01.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் பத்மநாதன் (முன்னாள் ஊழியர், ஸ்ரீலங்கா புத்தகசாலை - கஸ்தூரியார் வீதி) அவர்களின் அன்பு மனைவியும் சுகிர்தா (மாணவி - இராமநாதன் கல்லூரி ஜி.ச.ஈ. சா/தரம்) அவர்களின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மகளும் குகதாசன் கலைமகள் (லண்டன்), மலைமகள் (கனடா), குகதீபன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் உரும்பிராயில் உள்ள அவரின் தற்காலிக இல்லத்தில் இன்று (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் மதியம் 12.00 மணியளவில் இளங்காட்டு மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய் வீதி,*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(27300)(11-16-31-17)
தகவல்
ஆ.குகதாசன்.

## பிலிப் பிரான்சிஸ் சேவியர்

**(P.F.Xavier-முன்னாள் யாழ். மாநகர உதவி மேயர், யாழ். கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழக ஸ்தாபகர்)**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **P.F.** சேவியர் அவர்கள் 16.01.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாவிலு பிலிப் - காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்பு மகனும் றீற்றா, ஜெஸ்மின் அவர்களின் அன்புக் கணவரும் நிற்றி (கனடா), றூவனி (லண்டன்), நிறாஞ்சிற் (கனடா), சுறாஞ்சிற் (யாழ். மாநகரசபை, உத்தியோகத்தர்), றொஷானி, டிலானி (மக்கள் வங்கி), றிஷானி ஆகியோரின் அன்புத் தந்தையும் நிர்மலா (நல்லாயன் அ.த.ம.வி. ஆசிரியை கொழும்பு), கிறிஷான் கணகசபை (பொறியியலாளர் லண்டன்), கலிஸ்டெலா (கனடா), ஜெகான் (பொறியியலாளர் **senok**) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ருக்சன், ரிஷ்னி, அனன்ஜா, சத்தியவாணி, கவிலன், கிளறன்ஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் கிறிஸ்தோஸ்ரம், தருமநாயகம், அவர்களின அன்புச் சகோதரனும் **Dr.J.T.** சேவியர், காலஞ்சென்ற திருமதி பிரான்சிஸ், திருமதி **M.I.** ராஜேந்திரா, காலஞ்சென்ற **Dr.G.A.** பெனாட், பெனடிட் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

